விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 17 ஞாயிற்றுக்கிழமை (30.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 102




## எனது பதவிக் காலத்தில் 3 தவறிழைத்துள்ளேன்

# நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்படும் அபாயமுள்ளது



## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் நாட்டை இராணுவ ஆட்சிக்கு இட்டுச் செல்லும் அபாயம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வார இறுதி சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் தனது ஆட்சிக் காலத்தில் மூன்று தவறுகளைத் தான் விட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண தரப் பரீட்சை முடிபுகள் மூன்றாம் திகதி

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வெளியிடயிருப்பதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் பெறுபேறுகளைப் பாடசாலை அதிபர்கள் பரீட்சைகள் திணைக்களத்துக்கு வந்து பெற்றுக் கொள்ள (10 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பு

(கொழும்பு)

வடபோர் முனை நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முப்படைத் தளபதிகள் விளக்கமளித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் கூட்டப்பட்ட சிறப்புப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் யாழ்.குடாநாட்டு மற்றும் வன்னிப் பகுதி இராணுவத் தளபதிகள் உட்பட முப்படைத் தளபதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி கூட்டுப் படைத் தளத்திற்கு இராணுவத் தளபதி விஜயம்

(வவுனியா)

வன்னிக் கூட்டுப் படைத் தளத்திற்கு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று முறபகல் விஜயம் மேற்கொண்டு வன்னி கள நிலைவரங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

கொழும்பில் இருந்து விமானப் படை உலங்கு வானூர்தியில் வன்னிக் கூட்டுப் படைத் தளத்தைச் சென்றடைந்த லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவை வன்னி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜயசூரி வரவேற்றார்.

அதனையடுத்து வன்னிக் கூட்டுப்படைத் தலைமையகத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரச தரப்பைச் சார்ந்தவர்கள் குற்றவாளிகளாகும்போது விசாரணைக் குழுக்களால் எந்த நன்மையும் ஏற்படாது

## சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு உறுப்பினர் நீதிபதி ஜேன்-பிரிர் கொட் கருத்து

(கொழும்பு)

மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்களை நேர்மையாகச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்ற அரசியல் ரீதியான விருப்பாற்றல் அரசாங்கத்திற்கு இல்லை என சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவின் உறுப்பினர் நீதிபதி ஜே ன்-பிரிர் கொட் கூறியுள்ளார்.

சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவின் பங்களிப்பில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தல் மற்றும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட உறவுகளை அரசாங்கம் ஊக்கப்படுத்தினாலேயே அன்றி புதியதொரு சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவை நியமிப்பதன் மூலம் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியிருக்கும் பிரத்தியேக செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு, தற்பொழுது காணப்படும் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் புதிய சர்வதேச நிபுணர்கள் செயற்பட வேண்டும் என எதிர்பார்த்தால் உறுப்பினர்கள் தராதரம் குறைந்தவர்களாகவேயிருப்பர். (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் சார்பில் பிள்ளையான் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவார்

## இன்று நாடு திரும்பும் ரணில் ஹக்கீமுடன் பேசுவார்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் முதலமைச்சருக்கான வேட்பாளராகப் பிள்ளையான் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களின் இறுதித் தெரிவு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீமுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று பிற்பகல் நாடு திரும்ப இருப்பதாகக் குறிப்பிட்ட அக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளைக் கும்பலின் வாகனம் விபத்து


### மூவர் பலி; ஐவர் காயம்

(கொழும்பு)

கொள்ளைச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்டு விட்டுத் தப்பிச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் கோஷ்டி பயணம் செய்த வாகனம் விபத்தொன்றில் சிக்கியதில் அதிலிருந்த மூவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர். மேலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். சிலர் தப்பியுள்ளனர்.

பலியானவர்களில் பொலிஸார் ஒருவரும் அடங்குவர். இவரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்








கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான மாபெரும் துடுப்பாட்டப்போர் நேற்றைய தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது, விருந்தினர்கள் இரு கல்லூரிகளினதும் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதையும் துடுப்பாட்ட அணி வீரர்களையும் படங்களில் காணலாம்.

# நிதர்சன்,ஏரகன் சிறப்பான இணைப்பாட்டம்; கொக்குவில் இந்து 200 ஓட்டங்கள் குவிப்பு

(அமிர்தன்)

பி.நிதர்சன், இ.ஏரகனின் சிறப்பான இறுதி விக்கெட் இணைப்பாட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் யாழ்.இந்துக் கல்லூரி அணி நேற்றைய-முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 2 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 'இந்துக்கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போர்' என வர்ணிக்கப்படும் இரு தினங்களைக் கொண்ட இன்னிங்ஸ் துடுப்பாட்டப்போட்டி நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியின் ஆரம்ப வைபவமாக இரு கல்லூரி அதிபர்களும், பிரதம சிறப்பு விருந்தினர்களும் இரு கல்லூரி அணிவீரர்களும் கௌரவிக்கப்பட்டு மேலத்தேய வாத்தியங்களுடன் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டு போட்டி வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணித் தலைவர் தி.கௌசிகன் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான துவாரகன், நிரூஜன் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

எனினும் அணி 19 ஓட்டங்களை எடுத்தபோது நிரூஜன் 17 ஓட்டங்களுடன் அஜித்தின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஜனார்த்தனன் சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தார்.

எனினும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 38 ஓட்டங்களை எடுத்தபோது நிதானமாக ஆடிய துவாரகன் 7 ஓட்டங்களுடன் அஜித்தின் பந்துவீச்சில் சுதாகரனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய சி.நிரோஜன் வந்தவேகத்திலேயே ஓட்டமெதனையும் எடுக்காமல் அஜித்தின் பந்துவீச்சில் அருண்ராஜிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் வாகிஷ் நிதானமாக ஆட, மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஜனார்த்தனன் 14 ஓட்டங்களுடன் அஜித்தின் பந்துவீச்சில் அருண்ராஜிடம்பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்களை இழந்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 41 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது. அடுத்துக் களமிறங்கிய வல்லவக்குமரன் சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தார். எனினும் அணி 79 ஓட்டங்களை எடுத்தபோது வல்லவக்குமரன் (2 நான்கு, 2 ஆறு உட்பட) 26 ஓட்டங்களை எடுத்து சங்கீதனின் சுழற்பந்துவீச்சில் கோசிகனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய நிரோஜன் சிறப்பாக ஆட, மறுமுனையில் அணித்தலைவர் வாகிஷ் 12 ஓட்டங்களுடன் சங்கீதனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த கோபிகன் 5 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் பவசுதனின் பந்துவீச்சில் சுதாகரனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 7விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

8-வது விக்கெட்டுக்காக நிரோஜனுடன் இணைந்தஏரகன் சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுக்க கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 100 ஓட்டங்களை கடந்தது. இருவரும் இணைந்து 8-வது விக்கெட்டுக்காக 42 ஓட்டங்களை பகிர்ந்தபோது கு.நிரோஜன் (2 நான்கு,ஒரு ஆறு உட்பட) 21 ஓட்டங்களுடன் டிலானின் பந்துவீச்சில் சங்கீதனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய லக்ஷன் ஒரு ஓட்டத்தை மாத்திரம் எடுத்து சங்கீதனின் பந்துவீச்சில் அஜித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி133 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 10-வது விக்கெட்டுக்காக நிதர்சன் ஏரகனுடன் இணைந்து அதிரடியாக ஆட ஓட்டஎண்ணிக்கைமளமளவென அதிகரித்தது.

சிறப்பாக ஆடிய நிதர்சன் (4 நான்கு. 2 ஆறு உட்பட) 41 ஓட்டங்களை எடுத்தபோது பிரியதர்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அதன் முதல் இன்னிங்ஸில் 60.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

மறுமுனையில் ஆட்டமிழக்காமல் ஏரகன் (4 நான்கு உட்பட) 33 ஓட்டங்களை எடுத்தார். உதிரிகளாக 21 ஓட்டங்கள் கிடைத்தன. பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணிசார்பாக அஜித் 16 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 33 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சங்கீதன் 11 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரியதர்சன், பவசுதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது. முதலாவது ஓவரை வீசிய நிரோஜனின் முதலாவது பந்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பிரியதர்சன் ஓட்டமெதனையும் பெறாமல் வாகீஷிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய நிரூஜன் சிறப்பாக ஆட, மறுமுனையில் அருண்ராஜ் 4 ஓட்டங்களுடன் நிரோஜனின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் யாழ்.இந்துக் கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 2 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் நிரூஜன் 13 ஓட்டங்களுடனும் கோசிகன் ஓட்டமெதனையும் ஆரம்பிக்காத நிலையில் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் நிரூஜன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இரண்டாவதும் இறுதிநாளானதுமான இன்று காலை 9.30 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (ந-5)

**மணமக்கள் தேவை**

1979 கனடா சிற்றிசன், RC வேத மணமகனிற்கு டாக்டர் அல்லது மருத்துவத்துறை சார்ந்த மணமகளும், 1971 பூரட்டாதி கிரகபாவம் 22,2ல் செவ்வாயுடைய மணமகன், 1979 மகம் கிரகபாவம் 98, செவ்வாய் தோஷமற்ற பட்டதாரி மணமகள் ஆகியோருக்குப் பொருத்தமான மணமக்களும் தேவை.

*தொடர்பு:-*

**விதூஸ் திருமணசேவை,**
இல.44A, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை.
T.P:- 0776146221
(973)

**தேவை**

பாவனையிலுள்ள /பழைய /பாவனைக்கு உதவாத Sharp போட்டோக் கொப்பி இயந்திரங்கள் விற்க விரும்பவர்கள் முழுப்பெயர், விலாசம், மொடல் நம்பர் தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் கீழ் உள்ள விலாசத்திற்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 984
இல.3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.
(984)

**வாலையம்மன் திருமணசேவை**

உங்கள் பிள்ளைகளுக்குப் பொருத்தமான மணமகன், மணமகள் தேர்ந்தெடுக்க உடன் தொடர்பு கொள்ளவும்.

**'வாலையம்மன் திருமணசேவை'**
**இல. 4/1 ,செங்குந்தா சந்தை**
**மேல்மாடி நல்லூர்.**


1969,1970,1976இல் பிறந்த (P.R) உடைய பாவம் கூடிய லண்டன் மணமகன்களுக்கு மணப்பெண்கள் தேவை.

மேலும் கைரேகை பார்க்க, மணப்பெண் ஒப்பனை செய்ய, சகலவிதமான கேக் வகைகளுக்கும் சகலவிதமான பலகார வகைகளுக்கும் இங்கே தொடர்பு கொள்ளவும். T.P:- 0771331566
(960)

# மாறப்போகும் போரின் திசைகள்

பாதுகாப்பு ஆய்வு
வேல்ஸிலிருந்து அருஷ்

✠ நாயாறு கடற்பரப்பில் நடைபெற்ற தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பலின் தாக்குதலாக இருந்தால் அது அரசின் கப்பல் வர்த்தகத் துறையிலும், படையினருக்கான விநியோக வழிகளிலும் கடுமையான தாக்கத்தை உண்டு பண்ணக் கூடியது


கடல்கண்காணிப்பில் கடற்படையினரின் டோராப்படகு

✠கடற்படையினரின் வலிமை மிக்க தாக்குதல் படகு கடலடி தாக்குதல் மூலம் திடீரென வெடித்து சிதறியது. படைத்துறை மட்டத்தில் பல புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது

✠ ராடர்களின் திரைகளில் தெரியாத விடுதலைப்புலிகளின் நவீன ஸ்ரெல்த் ரக தாக்குதல் கலம் கரும்புலித் தாக்குதலை நடத்தியதா?

விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் சிறப்பு தளபதி கேணல் சூசை தொடர்பாக கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் கடுமையான வதந்தி தென்னிலங்கையில் பரவியிருந்தது. முல்லைத்தீவு கடற்பகுதியில் நடைபெற்ற விபத்தில் சூசை காயமடைந்ததை தொடர்ந்தே இந்த வதந்தி பரவியது.

எனினும் பின்னர் அது வழமை போலவே விரைவில் மழுங்கிப்போய்விட்டது. ஆனால் அன்று பரீட்சித்து பார்க்கப்பட்ட உத்திகள் தற்போது கடற்படையினரை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. அதாவது கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் நடைபெற்ற அந்த விபத்தின்போது கடற்புலிகள் நவீன கலங்களைத் தகர்ப்பதற்கான நவீன ஆயுதங்களையும், அதற்கான உத்திகளையுமே பரீட்சித்து பார்த்து கொண்டிருந்ததாக வன்னி தகவல்கள் தெரிவித்திருந்தன.

கடற்புலிகள் பரீட்சித்து பார்த்த நவீன ஆயுதங்களுடன் கூடிய இந்த புதிய உத்திகள் கடந்த 22ஆம் திகதி நாயாறு கடற்பகுதியில எதிரெலித்துள்ளதா? என்ற பலமான சந்தேகங்கள் தற்போது எழுந்துள்ளன. அதாவது நடைபெற்றுவரும் நாலாம் கட்ட ஈழப் போரில் வான்புலிகளின் தாக்குதல் வான் தாக்குதலில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியிருந்ததைப்போல முல்லைத்தீவை அண்டிய நாயாறு கடற்பகுதியில் கடற்படையினர் சந்தித்த இழப்பு கடற்போர் வேறு ஒரு பரிமாணத்தை சந்தித்துள்ளதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

கடலுக்கு அடியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பால் கொழும்பு டொக்கியாட் நிறுவனத்


பயிற்சியில் ஈடுபடும் கடற்புலிகளின் நீச்சல் பிரிவு

தில கட்டப்பட்ட பி437 இலக்க அதிவேகத் தாக்குதல் படகு சொற்ப நேரத்தில் மூழ்கிப் போயுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். கரும்புலித்தாக்குதல் மூலமே படகு அழிக் கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித் துள்ள போதும், கடற்படையினர் அதனை மறுத்துள்ளனர்.

அதிவேகத் தாக்குதல் படகு அழிந்து போவதற்கு முன்னர் அப்பகுதியில் கடற்சமர்கள் எவையும் நடைபெறவில்லை எனவும், அந்த பகுதியில் சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த இரு அதிவேகத் தாக்குதல் படகுகளின் ராடர் திரைகளிலும் கடற்புலிகளின் படகுகள் எதனையும் தாம் அவதானிக்கவில்லை எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இது ஒரு கடற கண்ணிவெடி தாக்குதலாக இருக்கலாம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை இரண்டு மணியளவில் நடைபெற்ற இந்த தாக்குதலில் படகின் கட்டளை அதிகாரி உட்பட 6 கடற்படையினர் காப்பாற்றப்பட்ட போதும் 10 கடற்படையினர் காணாமல் போயுள்ளனர். இலங்கை கடற்படையினரின் கரையோரத் தாக்குதல் படகுகளில் வலிமை மிக்க அதிவேகத் தாக்குதல் படகுகளின் இழப்புக்கள் கடற்படையினரின் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.

### இழப்புக்களை உடனடியாக ஈடு செய்வது சாத்தியமற்றது

கடந்த வாரம் மூழ்கடிக்கப்பட்ட அதிவேகத் தாக்குதல் படகுடன் நடைபெற்று வரும் நாலாம் கட்ட ஈழப்போரில் கடற் படையினர் 9 டோறாக்களை இழந்துள்ளனர். இஸ்ரேலின் ஆயுதங்களுடன் ஒவ்வொன்றும் 5 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த படகுகளின் இழப்புக்களை கடற்படையினர் உடனடியாக ஈடுசெய்வது என்பது சாத்தியமற்றது.

ஜப்பானின் முதலீட்டில் இயங்கிவரும் கொழும்பு டொக்கியாட் நிறுவனம் இஸ்ரேலின் தொழில்நுட்பத்தை பிரதி பண்ணி இந்த அதிவேக தாக்குதல் படகுகளை கட்டி வரும் போதும் உடனடியாக அவற்றை சேவையில் இணைத்துக் கொள்வது கடினமானது. ஒரு அதிவேக தாக்குதல் படகை கட்டிமுடிப்பதற்கு 6 தொடக்கம் 12 மாதங்கள் செல்லலாம்.

மேலும் கடற்படையினரின் இழப்புக்களுக்கு அப்பால் இந்த தாக்குதலுக்கு பயன்படுத் தப்பட்ட உத்தி தென்னிலங்கையில் பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது. கடற்படையினரின் வலிமை மிக்க தாக்குதல் படகு கடலடி தாக்குதல் மூலம் திடீரென வெடித்து சிதறியது படைத்துறை மட்டத்தில் பல புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதாவது இந்த தாக்குதல் தொடர்பாக கடற்படைத்தரப்பின் மத்தியில் மூன்று முக்கிய கேள்விகள் எழுந்துள்ளன.

ராடர்களின் திரைகளில் தெரியாத விடுதலைப்புலிகளின் நவீன ஸ்ரெல்த் ரக தாக்குதல கலம் கரும்புலித் தாக்குதலை நடத்தியதா?

கடற்படையினரின் படகுகளை தேடித் தாககும் சிறிய நவீன டோப்பிடோ கடற்கண்ணி வெடிகளை விடுதலைப்புலிகள் பயன்படுத்தினரா?

சிறிய ரக நீர்மூழ்கி கப்பல்களை கொண்டு கரும்புலிகள் அதிவேகத் தாக்குதல் படகை தாக்கி அழித்தனரா?

என்பவை தான் கடற்படையினர் மத்தியில் எழுந்திருக்கும் கேள்விகள் ஆகும்.


ஸ்ரெல்த் கடற்கலம் ராடர் திரைகளில் புலப்படாதவாறு வடிவமைக்கப்பட்ட அதிவேக கரும்புலித்தாக்குதல் படகாகும். கடல் அலைகளுடன் அலையாக பயணிக்கும் இந்த படகு 50 நொட்ஸ் வேகத்தை எட்டக் கூடியது. 2000 ஆம் ஆண்டு திருகோணமலை துறைமுகத்திற்கு அண்மையான மார்பிள் பீச் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் விடுதலைப புலிகள் இத்தகைய படகை பயன் படுத்தியிருந்தனர்.

வெடிமருந்துகளுடன், முன்புறத்தின் இருபுறமும் இரண்டு 122 மி.மீ எறிகணைகள் பொருத்தப்பட்ட இந்த படகு வேகமாக சென்று கடற்படை படகுடன் மோதும் போது ஏற்படும் சேதம் மிக அதிகமாகும். அமெரிக்காவின் ஸ்ரெல்த் 117 தாக்குதல் விமானத்தின் வெளிககட்டமைப்பை ஒத்த அமைப்புடைய இந்த படகுகளை ராடர்களில் அவதானிப்பது கடினமாகும்.

கடற்படையினர் கூறுவதுபோல இது ஒரு கண்ணிவெடித் தாக்குதலாகவும் இருக்கலாம் என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் குறித்த படகை குறிவைத்து கடல் கண்ணி வெடி ஏவப்பட்டதா? என்பதே முக்கிய கேள்வி.

### நீர்மூழ்க்கிப்படகின் தாக்குதலை நிராகரிக்க முடியாது

இதனிடையே நீர்மூழ்கிப் படகின் தாக்குதலையும் நிராகரிக்க முடியாது என கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளை பொறுத்தவரையில் ஒரு முழுத்தேசத்திற்குரிய படைக்கட்டுமானங்களை வடிவமைப்பதிலும், அதிர்ச்சியான தாக்குதல்களை நடத்துவதற்கு ஏதுவாக படைக்கலங்களையும், தாக்குதல் உத்திகளையும் வடிவமைப்பதிலும் ஒருபோதும் பின்நிற்பதில்லை.


கடற்புலிகளின் அதிவேக விசைப்படகு

1990 களின் பிற்பகுதியில் தமது விமானப் படையின் வடிவமைப்பில் விடுதலைப்புலிகள் கவனம் செலுத்திய அதேசமயம் நீர்மூழ்கிக் கப்பல்களின் வடிவமைப்பிலும் அதிக அக்கறை செலுத்தி வந்துள்ளனர். இலங்கை அரசின் புலனாய்வுப் பிரிவினரும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக அவ்வப்போது தகவல்களை வெளியிட்டே வந்துள்ளனர்.

1990 களின் முற்பகுதியில் விடுதலைப் புலிகளால் வடிவமைக்கப்பட்ட சிறிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று வடமராட்சிக் கடலில் பரிசோதிக்கப்பட்டது. பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அந்த நீர்மூழ்கிப் படகு நீரை உள்ளிழுத்து வெளியேற்றும் பொறிமுறை மூலம் அன்று பரீட்சிக்கப்பட்டது.

இதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு தாய்லாந்தின் தென்பகுதியில் உள்ள தீவுகளின் கப்பல் கட்டுமிடம் ஒன்றில் அரைகுறையாக வடிவமைக்கப்பட்ட சிறிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று தொடர்பான தகவல்களும் வெளிவந்திருந்தன.

இரண்டு அல்லது மூன்று பேர் பயணம் செய்யக்கூடிய இந்த சிறிய நீர்மூழ்கிக் கப்பல் 1990 களில் விடுதலைப் புலிகளால் வடிவமைக்கப்பட்ட கப்பலை ஒத்த வகை எனவும் இலங்கையின் புலனாய்வுத்துறை அன்று தெரிவித்திருந்தது.

கடற்சமரை பொறுத்தவரை அதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மேற்பரப்பின் மீது நடைபெறும் சமர், வான்வழித் தாக்குதல், நீரடித தாக்குதல் என்பனவே அவையாகும். இந்த ஒவ்வொரு தாக்குதல்களும் போருக்கு ஒவ்வொரு வகையான வியூகங்களை கொடுக்கக் கூடியவை.

இதில் நீரடித் தாக்குதலானது தாக்குதல் நடத்தும் கலம் எதிரியின் கண்களில் படாமல் பயணிப்பது அனுகூலமானது. அதாவது அது அதிக ஆழத்தில் பயணிக்கும் போது அதனை கண்டுபிடித்து தாக்கி அழிப்பது கடினமானது. மேலும் கலம் எதிரியின் கண்களில் படாமல் பயணிப்பதனால் அது தனது இலக்குகளை மிகவும் அண்மையில் நெருங்கி அழித்து விடக கூடியது.

### உளவியல் தாக்கம

நீர்மூழ்கிக் கப்பலானது இந்த நேரடியான தாக்குதல் அனுகூலங்களுக்கு அப்பால் பாரிய உளவியல் தாக்கத்தையும், எதிரிப்படைகளின் ஆள், ஆயுத வளங்களின் வீண் விரயங்களையும் ஏற்படுத்தக் கூடியது.

உதாரணமாக 1982 ஆம் ஆண்டு பிரித்தானியாவிற்கும் ஆர்ஜென்ரீனாவுக்கும் இடையில நடைபெறற போக்லன்ட் போரில் பிரித்தானியாவின் எச்.எம்.எஸ் பெங்குறொர் என்ற நீர்மூழ் கிக் கப்பல் ஆர்ஜென்ரீனா வின் ஏ.ஆர்.ஏ ஜெனரல் பெல்கி ரேனோ என்ற கப்பலை தாக்கி மூழ்கடித்திருந்தது. இதில் 323 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலின் பின்னர் தமது கப்பல்கள் நீர்மூழ்கிக் கப்பல்களின் தாக்குதல்களுக்கு எந்த நேரமும், எந்த இடத்திலும் இலகுவாக உட்படலாம் என்பதை உணர்ந்த ஆர்ஜென்ரீனா கடற்படையினர் தமது கப்பல்களை போர் முடியும் வரை துறைமுகமகளுக்குள்ளேயே பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

அதாவது மிகவும் பரந்த கடற்பிரதேசத்தில் ஏதாவது ஒரு இடத்தில் நடைபெறும் தாக்குதல்களை தடுப்பதற்கு எதிர்த்தரப்பு தனது அதிகளவான வளங்களை பயன்படுத்த வேண்டும் அல்லது களத்தில் இருந்து ஒதுங்க வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றது. இது தான் அதன் நேரடியற்ற மற்றும் உளவியல் தாக்கங்களுக்கான சிறு உதாரணம்.

### விநியோக வழிகளில் தாக்கம்

இலங்கையைப் பொறுத்த வரையில் நாயாறு கடற்பரப்பில் நடைபெற்ற தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பலின் தாக்குதலாக இருந்தால் அது அரசின் கப்பல் வர்த்தகத்துறையிலும், படையினருக்கான விநியோக வழிகளிலும் கடுமையான தாக்கத்தை உண்டு பண்ணக் கூடியது.

நாயாறு கடற்பகுதியில் நடைபெற்ற கடல் தாக்குதலில் மூன்று கடற்கரும்புலிகள் பலியானதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளது இந்த தாக்குதல் ஸ்ரெல்த் படகு அல்லது நீர்மூழ்கி படகின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்களை வலுவாக ஏற்படுத்தி உள்ளதாக தென்னிலங்கை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த நீரடித்தாக்குதலானது கடற்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பாரிய தாக்கத்தை எற்படுத்த வல்லது என்பதுடன் ஏறத்தாள நான்கு டிவிசன் இராணுவத்தினரும் பல ஆயிரம் கடற்படையினர் மற்றும் காவல்துறையினரும் முடங்கிப் போயுள்ள யாழ்.குடாநாட்டிற்கான விநியோக வழிகளிலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

இதனையே கடந்த செவ்வாய்கிழமை அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்பு கூட்டுத் தாபனதத்திற்கு வழங்கிய நேர்காணலில் விடுதலைப் புலிகளின் படைத்துறை பேச்சாளர் இராசையா இளந்திரையன் உறுதிப்படுத்தியுள்ளார்.

நாயாறு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட கடல் தாக்குதல் உத்திகள் தொடர்பாக தகவல் எதுவும் கூறுவதை தவிர்த்துக் கொண்ட அவர், இந்த தாக்குதல் உத்திகள் பல தொடர விளைவுகளை ஏற்படுத்தும் எனவும், படையினரின் விநியோகங்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பொருளாதாரத் தாக்கம்

இத்தகைய தாக்குதல் உத்திகளை எதிர்கொள்வதற்கு அரசிற்கு அதிக படைவளமும், நிதிவளவும் தேவை. அதாவது நீண்ட கடற்பரப்பில் கண்ணிவெடிகளை தேடி அலைவதற்கும், நீர்மூழ்கிகளை கண்டறிவதற்கும் நவீன தொழில்நுட்பங்களும், பெருமளவான நிதிவளமும் தேவை.

நடைபெற்றுவரும் போரினால் ஏற்கனவே இலங்கை அரசின் பொருளாதாரம் மிகவும் பாதகமான கட்டத்தை அடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் செலவு 22 சதவீதத்தை அண்மித்துவரும் இந்த நிலையில் புதிதாக திறக்கப்படும் களமுனைகளும் புதிய தாக்குதல் உத்திகளும் யாரும் எதிர்பார்க்காத திசையில் போரை நகர்த்த போகின்றது என்பது மட்டும் யதார்த்தமானது.

நன்றி வீரகேசரி

# இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம். புனருத்தாரண ஆறாவது ஆண்டு நிறைவு விழா பரிசில் வழங்கும் வைபவம்




இன்றைய காலச்சூழலில் மக்களின் மிதமிஞ்சிய நேரத்தை பயனுள்ள ஓர் அறிவுத் தேடலாக வாசிப்புத் துறை மற்றும் பயனுள்ள பொழுது போக்குகளில் ஈடுபடவைக்கும் புதியதோர் முயற்சியில் இணுவில் பொதுநூலகம் தன்னை அர்ப்பணித்துள்ளது. இன்று சுமார் பதினொராயிரம் புத்தகங்களுடன் வாசிப்பு வீச்சுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் தன்னை தயார்ப்படுத்தி வருகின்றது. இந்த உன்னதமான நோக்கத்துக்காக நூலகம் உங்கள் அனைவரையும் வருக வருக என்று வரவேற்கின்றது.

இடம்:- இணுவில் பொதுநூலக கலாசாரமண்டபம் , மானிப்பாய் வீதி, இணுவில்.
காலம்:- 30.03.2008 ஞாயிற்றுக்கிழமை பி.ப-2.30
தலைவர்:- திரு நி. கஜேந்திரன், (இ.பொ.நூலகம்)
பிரதம விருந்தினர்:- உயர் திரு வசந்தசேனன் (மேலதிக மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்:- திரு ஆ.சி. நடராசா (முகாமையாளர், தினக்குரல்)
திரு என்.விஜயசுந்தரம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
கௌரவ விருந்தினர். திரு எஸ். சதானந்தன் (அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)
திரு.இ.பாலச்சந்திரன் (அதிபர், எவரெஸ்ட் கல்வி நிலையம்)

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல் | திரு.க.ரவீந்திரன் (கிராமசேவையாளர் , இணுவில்)<br>திரு. ந.திவாகரன்<br>திரு.S.கந்தசாமி<br>திரு.என். சுந்தரலிங்கம்<br>திரு.து.சிவகுமாரன்<br>திரு.S .கலைநேசன் |
| தேவாரம் | நூலக அங்கத்தவர் |
| நூலக கீதம் | |
| நூலக கொடியேற்றல் | |
| வரவேற்புரை | ம.ஜெயகாந்தன் (பொருளாளர்) |
| ஆசியுரை | சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் பிரதம குரு (ஸ்ரீ பரராகசேகரப்பிள்ளையார் கோயில், இணுவில். |
| தலைமையுரை | |
| தொடக்கவுரை | திரு.க.தேவராஜா (போஷகர், இணுவில் பொது நூலகம்) பீடாதிபதி வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடம் , யாழ்.பல்கலைக்கழகம்) |
| சிறப்புவிருந்தினர் உரை | |
| பிரதம விருந்தினர் உரை | |
| பரிசில் வழங்கல் | உயர் திரு வசந்தசேனன் அவர்கள் (மேலதிக மாவட்ட நீதிபதி ,யாழ்ப்பாணம்) |
| நூலகர், நூலக உதவியாளர்கள் கௌரவிப்பு | |
| கலை நிகழ்வுகள் | |
| நன்றியுரை | திரு.ந.நாதரூபன் (செயலாளர்) |
| நூலக கீதம் | |

## பரிசில்கள் பெறுவோர் விபரம்
## பொது அறிவு

***ஆரம்பப் பிரிவு***

| | |
|---|---|
| 1ஆம் இடம் யோகேஸ்வரலிங்கம் ரவிதர்சன் | ATC கல்வி நிறுவனம் |
| 2ஆம் இடம் ரத்தினன் யசிந்தன் | மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 3ஆம் இடம் சங்கவி திருச்செல்வம் | ATC கல்வி நிறுவனம் |

***கீழ்ப் பிரிவு***

| | |
|---|---|
| 1ஆம் இடம் சிவஞானசிங்கம் விஷ்ணுசாந் | ATC கல்வி நிறுவனம் |
| 1ஆம் இடம் திருச்செல்வம் யதுசன் | ATC கல்வி நிறுவனம் |
| 2ஆம் இடம் சண்முகலிங்கம் துஷிந்தன் | ATC கல்வி நிறுவனம் |
| 2ஆம் இடம் துஷிந்தன் ஸ்ரீசாஸ்வதனன் | யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் |
| 3ஆம் இடம் இராசேந்திரம் ஜனார்த்தனன் | தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி |
| 3ஆம் இடம் பாலகுமார் பாலஜீவன் | ATC கல்வி நிறுவனம் |

***மத்தியபிரிவு***

| | |
|---|---|
| 1ஆம் இடம் புவனேந்திராஜா திவ்வியா | ATC கல்வி நிறுவனம் |
| 2ஆம் இடம் இரத்தினசிங்கம் சுவிஸ்ரன் | ATC கல்வி நிறுவனம் |
| 3ஆம் இடம் தர்சிகா சிதம்பரநாதன் | ATC கல்வி நிறுவனம் |

***சிறப்புப் பரிசில்கள்***

| | |
|---|---|
| காயத்திரி அரியசீலன் | இராமநாதன் கல்லூரி |
| ஜனனி கணேஸ் | இராமநாதன் கல்லூரி |

***மேற்பிரிவு***

| | |
|---|---|
| 1ஆம் இடம் வினுஷா நாராயணன் | இராமநாதன் கல்லூரி |
| 2ஆம் இடம் சி.துஷ்யங்கா | மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| 3ஆம் இடம் ஸ்ரீகணேஸ் பாவானுஷ் | இணுவில் பொ. நூலகம் |

கிரிக்கெற் -அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம்

சதுரங்கம்

| ***ஆண்கள் பிரிவு*** | ***பெண்கள் பிரிவு*** |
|---|---|
| 1ஆம் இடம் S .பவகணேஸ் | தர்சா வெற்றிவேல் |
| 2ஆம் இடம் S .கோபிகணேஸ் | S. விஜிதா |
| 3ஆம் இடம் S.நிசாகன் | பா. ஜெனித்தா |

இணுவில் பொதுநூலகமானது சமூகத்தின் நலன்கள் மற்றும் தேவைகளை மட்டும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு சமூக அபிவிருத்தி ஸ்தாபனமாகும். எமது மக்கள் மத்தியில் மிகவும் பின் தங்கிப்போயுள்ள வாசிப்புத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும் . எனவே மிகவும் உன்னதமான சமுதாயப்பணியில் ஈடுபட்டியிருக்கும் நூலக அங்கத்தவர்களாகிய நாம் உங்கள் அனைவரது ஆதரவையும் புத்தக அன்பளிப்பையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம் .

நன்றி.

வாழ்த்துகின்றோம்
கணனி உதிரிப்பாகங்கள்
PC POWER UNIT
356B கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(அ939)

வாழ்த்துகின்றோம்
தரம் 4முதல் ,தரம் 13 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
N.C.A கல்வி நிலையம் கே.கே.எஸ்.றோட் இணுவில்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் ஒரு வருட பயிற்சி முகாம்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில், சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள், அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கமாக ஒரு வருடப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளதால், இப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர், செயலாளர் ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித் துறை என்று விலாசமிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும்படி சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் 20 முதல் 28 வயதுக் குட்பட்டவர்களாகவும், க.பொ.த.சாதாரண தரத்தில் இந்துசமயம் ஏ, ஆங்கிலம் சி, தமிழ் ஏ தரத்தில் சித்தியும், க.பொ.த.உயர்தரத்தில் இந்து நாகரிகத்தில் ஏ தர சித்தி பெற்றிருப் பதுடன் விவாகமாகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்விச் சான்றிதழ்கள், கல்வி கற்ற கல்லூரி அதிபர்களினால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றிதழ்களும், ஏனைய 2 நற் சான்றிதழ் களும் விண்ணப்பதாரிகளைப் பற்றிய தகவல் களைப் பெறும் வகையில் இருவரின் பெயர், விலாசம்,பதவி என்பனவும் இணைக்கப்படல் வேண்டும். அத்துடன் பொதுப் பணிகளில் ஈடுபட்டிருந்தால் பணியாற்றிய சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுவோரிடம் ரூபா 1000/- பயிற்சி முடிவில் மீளளிக்கப் படவுள்ள கட்டணமாக அறவிடப்படும். இடை யில் பயிற்சியை நிறுத்திக் கொண்டால் பணம் மீளளிக்கப்படமாட்டாது எனவும் அறிவித் தார். ஓ

# 'கோப்சிற்றி' திட்டத்திற்கு வழங்கப்படவிருந்த பல இலட்சம் ரூபா திரும்பும் நிலை

யாழ்.மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டு றவுச் சங்கங்களின் 'கோப் சிற்றி' அமைப் பதற் கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படாமை யால் அதற்கு வழங்கப்படவுள்ள பல இலட்சம் ரூபா திரும்பக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாக கூட்டுறவுத் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கோப் சிற்றி என்ற நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டி தளபாட உபகரணங்களு டன் கூடிய மாதிரி விற்பனை நிலையங்களைத் திறந்து பாவனையாளர்களுக்கு மலிவான விலை யில் வழங்கக்கூடிய செயற்பாட்டை செயற் படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. இந்தச் செயற்பாட்டை நடைமுறைப் படுத்துவதில் கூட்டு றவுச் சங்கங்கள் அக்கறையற்ற போக்கை கடைப்பிடிப்பதால் கோப் சிற்றி அமைப்பதற்கு வழங்கப்படவுள்ள பல இலட்சக்கணக்கான ரூபா திரும்பக்கூடிய நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் சித்திரைப்புத் தாண்டிற்கு முன்பு இதனைக்கட்டி முடித்து விற் பனை செய்யவேண் டிய நிலையில் இதுவரை எந்தச் சங்கமும் நட வடிக்கை எடுக்கவில்லை என தகவல்கள் தெரி விக்கின்றன. இந்த கோப் சிற்றி அமைப்பதற்கு கூட்டுறவுச்சங் கங்களின் கணக்குகளையெல்லாம் வங்கியூடாகவே செயற் படவேண்டும் என்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் கோப்சிற்றி அமைப்பதற்கு பின் நிற்பதாக தெரிய வருகின்றது. (அ-5)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்.பல்கலைக்கழக, பீடங்களுக்கு இடை யிலான. வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பல்கலைக் கழக மைதானத்தில் உடற்கல்வி அலகின் பதில் பணிப்பாளர் க.கணேஷநாதன் தலை மையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேரவை உறுப்பினரும், விளையாட்டு ஆலோ சனை சபையின் பிரதிநிதிகளான எஸ்.எக்ஸ். குலநாய கம் கலந்துகொண்டுசிறப்பிக்கவுள்ளார். (அ-7)

# சமுர்த்தி நிவாரணம் தரமான பொருட்கள் வழங்க நடவடிக்கை

கடந்த 20 ஆம்திகதி மாவட்ட பிரதேச செயலக அதிகாரிகளால் யாழ். மாவட்டத்தி லுள்ள கணிசமான அளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த நிலையங் கள் கிளைகள் ஆகியவற்றில் சமுர்த்தி நிவாரணத்துக் காக வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் சரியாகப் பேணப்படு கின்றனவா என உறுதிப்படுத்தும் நோக்குடன் திடீர் பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டன. சில பலநோக் குக் கூட்டுறவுச் சங்கங்களில் குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப் பட்டன. அவை தொடர்பாக பொருத்தமான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அர சாங்க அதிபர் அறிவித்துள்ளார். ஓ

# இராசிபலன்

30.03.2008
(பங்குனி17,ஞாயிற்றுக்கிழமை)
பூராடம் முன்னிரவு 10.19 மணிவரை
அட்டமி பிற்பகல் 01.28 மணிவரை
இராகுகாலம் 04.42-06.12மணிவரை
சுபநேரம்-09.12-10.42 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சரீரப் பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, எதிர்பாராதசெலவு. |
| இடபம் | வீண்பகை, காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, பொருள் விரயம். |
| மிதுனம் | களஸ்திரநன்மை, தேகநலன், முயற்சி கைகூடும், சத்துருஜெயம். |
| கடகம் | எடுத்தகாரியம் கைகூடும், உற்சாகம், பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி. |
| சிங்கம் | கௌரவக் குறைவு, தொழிலில் மந்த நிலை, குடும்பக் கவலை, பணக் குறைவு. |
| கன்னி | தன்னம்பிக்கைக் குறைவு, உற வினர் சந்திப்பு, உடல் நலக் குறைவு, தொழில் ஆரம்பம். |
| துலாம் | கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், உறவினர் வருகை, கீர்த்தி. |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், மனோசங்கடம், தனவிரயம், போசனசுகக் குறைவு. |
| தனுசு | நல்ல முயற்சி, தெய்வசிந்தை, சயனசுகம், தேகநலன். |
| மகரம் | சோம்பல்நிலை, புத்திரரால் கவலை, பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, காரிய சித்தி, போசனசுகம், உடல்நலம். |
| மீனம் | தூரதேசச் செய்தி, நன்கொடை, ஆரோக்கியம், முயற்சிகைகூடும். |

வளவன்

# அனல்மின் நிலைய நிர்மாணப் பணிகள் அடுத்த மூன்று மாதத்துள் ஆரம்பம்

## மின் சக்தி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை சம்பூரில் அமைக்கப்பட வுள்ள அனல் மின் நிலைய நிர்மாணப் பணி கள் அடுத்த மூன்று மாத காலப்பகுதிக்குள் ஆரம்பமாகுமென மின்சக்தி அமைச்சு தெரி வித்துள்ளது.

இந்தியாவுடன் இணைந்து முன்னெடுக் கப் படவுள்ள இந்த அனல் மின் நிலையத்தின் மூலம் ஆயிரம் மெகாவோட்ஸ் அலகு மின் சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென எதிர் பார்க்கப்படுகிறது.2012 ஆம் ஆண்டளவில் இந்த மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மின் சாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என மதிப் பிடப்பட்டுள்ளது.

இந்த அனல் மின் நிலையத்தின் நிர் மாணப் பணிகளை இலங்கை மின்சார சபை யின் கண்காணிப்பின் கீழ் இந்திய நிறுவன மான என்.பி.ரி.சி மேற்கொள்ளவுள்ளது. இந் நிலையத்தினை அமைப்பதற்காக எதிர் வரும் ஏப்ரல் மாத்திற்குள் சுமார் 700 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும். முதல் கட்டப் பணிகளுக்காக சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளது. இதில் 70 வீதமா னவை இந்தியா மற்றும் இலங்கை மின்சார சபையின் நிதிகள் தவிர்ந்த ஏனைய வெளி நாட்டு நிதிகள் மூலம் மேற்கொள்ளப்படவுள் ளது என்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள் ளது. (அ-5)

# எண் சோதிடம்



## எண் -8 (சனி)

முன் குறிப்பு: இவ்வெண்ணின் ஆதிக்கத்தின் கீழ் பிறந்த வாசகர்கள் அதிர்ஷ்டகரமாக வாழவேண்டியதற்கு ஈசன் அருள்புரிவாராக. இந்த ஆதிக்கரை எப்படி அதிர்ஷ்டகரமானவராகச் செய்வது என்று நான் பட்ட கவலையே (பல வருஷங்களுக்கு முன்பு, இப்பொழுதல்ல) என்னை இக் கலையை ஆராயத் தூண்டிற்று. இக் கலை சம்பந்தமாக உள்ள முன் நூல்களெல்லாம் இவ்வெண்ணை மிக துரதிர்ஷ்ட கரமானதென்று தான் கூறினவேயன்றி எப்படி அவர்களும் அதிர்ஷ்டகரமாக வாழமுடியு மென்பதைப் பற்றி ஒரு வார்த்தையும் கூறவில்லை.

ஆகையால் இவ்வெண்ணின் கீழ் பிறந்த மனிதர்களது வாழ்க்கைகளை ஆராய ஆரம்பித்தேன். ஏராளமான குறிப்புகள் தயாரித்த பின்னரும் ஆராய்ச்சி முடிவடைந்ததாகத் தோன்றவில்லை. அதன் பின்னர் அன்னை அருளால் இவ்வெண்ணின் தீமைகளை வெல்ல 5 எண்ணைத் துணைகொள்ள வேண்டு மென்னும் உண்மையை அறிந்து அக்குறிப்பின்படியே யோசனை சொன்னதன் பேரில் அநேக நண்பர் (8 ஆதிக்கர்)களது வாழ்க்கையில் விசேஷ மறு மலர்ச்சி ஏற்பட்டது. விதி வசப்பட்டவர்களான இந்த எண்ணுடையவரும் சந்தோஷமாக வாழ்ந்தால் தான் என் இலட்சியம் பூர்த்தியடையும். ஆகையால் வாசகர்கள் இவ்வெண் ஆதிக்கர்களைக் கண்டால் அவர்களையும் கடைத்தேற்றுவார்களாக.

பழைய சாஸ்திரங்களில் இவ்வெண் திருவருள் சம்பந்தமானதாகவும் மிக்க அதிர்ஷ்டகரமானதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது முற்றிலும் உண்மையே. இந்த ஆதிக்கருக்குத்தான் வேதாந்த உண்மைகளும் தத்துவார்த்தங்களும் மனதில் நன்கு புலப்படும். உலக வாழ்க்கையையும், சுகங்களையும் துச்சமாக நினைத்து துறவியாவார்கள். இவர்களது மனம் மேலான தெய்வீக உண்மைகளை அறியக் கூடியது. அருள் நாட்டம் உடையவராக வாழ்ந்தால் இவர்களுக்கு அற்புதமான அனுபவங்கள் ஏற்படும். இவ்வெண்ணும் பிருதிவி அம்சமேயாம்.

இது வாசகர்கள் மிக ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டிய எண்ணாகும். இந்த எண்ணின் கீழ் பிறந்தோரைப் பற்றி ஆராயு முன் இந்த எண்ணின் கிரகமான சனியைப் பற்றி ஓரளவு சரியாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். சனீஸ்வரன் பிராப்த கர்மத்துக்கு அதிபதி. இதனால் தான் எல்லோரும் என்ன தீங்கு நேர்ந்தாலும் அதற்கு சனிதான் பொறுப்பாளி என நினைக்கின்றனர். இது சரியல்ல. எல்லாக் கிரகங்களுக்கும் நன்மையும் தீமையும் புரியும் இயல்புகள் உண்டு. சனிக்கோ எனில் நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் சமத்துவமான அறிவைக் கொடுக்கும் திறமை உண்டு. அதனாலேயே சோதிடத்திலும் தராசைக் குறிக்கிற துலாராசியில் சனி உச்சமாக குறிக்கப்பட்டிருக்கிறது. மற்ற கிரகங்கள் எவ்வளவு பலமாக அமைந்த போதிலும் அவைகளை எல்லாம் அனுசரித்து வாழ்க்கையை விதிப்பது சனிதான். இதனால் தான் இரேகை சாஸ்திரத்திலும் சனிரேகை (சனி மேட்டை நோக்கிச் செல்வது) பிரவிருத்தியையும் வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளையும் கஷ்ட சுகங்களையும் குறிக்கிற 'விதி' ரேகையாகக் கருதப்படுகிறது. அவரவருடைய பூர்வ ஜன்ம, தற்கால புண்ணிய பாவங்களையும் நடவடிக்கை களையும் சீர்தூக்கி அதற்கொத்த பலனைக் கொடுப்பதால் இக்கிரகம் பொதுவாக எல்லோராலும் தூஷிக்கப்படுகிறது. இது நியாயமற்ற தூஷணை. ஆதி நூல்களில் சனியை ஒரு பெரிய ஆசனத்தின் மீது வீற்றிருந்து இடது கையில் தராசும் வலது கையில் கத்தியும் பிடித்திருப்பதாகவும் கண்கள் துணியால் கட்டப்பட்டிருப்பதாகவும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. தோள் மீது கருணை, பச்சாதாபம், ஆத்ம ஞானத்தைக் குறிக்கும் சின்னமாக வெண்புறாவும் காண்கிறது. எதிரே நிற்பவரை கவனியாமல் தராசை அனுசரித்து கத்தியை உபயோகப்படுத்துபவர் என்பதையே இப்படம் குறிக்கிறது. இன்னும் சனியைக் குறிக்கிற திருப்பதி மலையிலுள்ள ஸ்ரீ வெங்கடாஜலபதியை கையில் கத்தியைத் தரித்தவராகவும் (மற்ற விஷ்ணு ஆலயங்களில் இல்லை) கண்கள் இரண்டும் நடு மூக்கிலிருந்து கிளம்பும் நாமத்தால் முழுதும் மறைக்கப்பட்டவராகவும் இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். பாரபட்சமின்றி தண்டிக்கும் நீதிபதி, கண்டிக்கும்

**பண்டிட் ஸேதுராமன்**

உபாத்தியாயர் இவர்களைப் போன்றவரே சனி. இப்பொழுது அவர் நல்லவரா, கெட்டவரா என்பது விளங்கும். மற்ற கிரகங்கள் பிரவிருத்தியை தூண்ட, சனி ஒருவரே நிவர்த்தி மார்க்கத்தைக் கொடுக்கிறார்.

இந்தக் கிரக ஆதிக்கத்தினால் தான் சம நோக்கும், விருப்பு வெறுப்பின்றி விஷயங்களை ஆராயும் தன்மையும் உண்டாகிறது.

இந்தக் கிரக ஆதிக்கரே எட்டு எண்ணின் கீழ் பிறப்பவர்கள்– 'விதிவசப்பட்ட மாந்தர்' இவர்களுக்கு வாழ்க்கையில் தடுக்கமுடியாத சம்பவங்கள் நிகழும். எவ்வளவு பெரிய மேதாவியாக இருந்தாலும் (சனி புத்தியில் புகுந்து வேலை செய்பவராதலால்) இவர்களது யோசனைகளே இவர்களை விதி வழியிலே சேர்த்துவிடும். 8,17,26 திகதிகளில் பிறப்போர் இவ்வெண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்வோராவர். பிறந்த திகதி, மாதம், வருஷம் மூன்றையும் கூட்டினால் 8 வரும் தினத்தில் பிறப்போரும் இந்த எண்ணால் மிகவும் ஆளப்படுவார்கள்.

### அதிர்ஷ்டகரமானதா?

எப்படிப் பார்த்தாலும் இவ்வெண் அஞ்சி ஒதுங்க வேண்டியதாக இருக்கிறதேயன்றி, நெருங்கி உறவாடக் கூடியதாக இல்லை. இவ்வெண் சோதனைகள் நிறைந்தது. மிக்க அதிர்ஷ்டகரமாக அமையும் பொழுது கூட மிகப் பெரிய பதவியைக் கொடுத்து கூடவே சக்திக்கு மிஞ்சின பயங்கரமான பொறுப்புக்களையும் சுமத்தக் கூடியது. சிறு தவறுகளும் பெருத்த ஆபத்துக்களைக் கொண்டுவரும். மிக்க அதிர்ஷ்டசாலிகளாகத் தோன்றும் ஒரு சிலர் கூட உண்மையில் அதிர்ஷ்டசாலிகள் அல்லர். அது அவர்களையே கேட்டால் விளங்கும். ஏதாவதொரு குறை மனதை அரித்துக் கொண்டே இருக்கும். நிலைமைக்கும், யோக்கியதைக்கும், விருப்பத்திற்கும் ஒத்த வாழ்க்கை சகஜமாக அமைவதே இல்லை. இவர்களில் மேன்மையானவர்கள் அறிவுபெற்று நற்குணங்கள் பொலிவுற வாழ்வர். மற்றவர்களோ எவ்வளவு சாமர்த்தியசாலியாக இருந்த போதிலும், நடத்தைக்குத் தக்க முடிவை சந்தேகமற அடைவர். (தொடரும்)

# எதிரியிடம் சிக்கினால் சுட்டுக்கொன்றுவிடுங்கள் உதவியாளர்களுக்கு பின்லேடன் உத்தரவு

## முன்னாள் உதவியாளர் நாசர் பேட்டி

சர்வதேச தீவிரவாதி அல்–கொய்தா இயக்க தலைவன் பின்லேடனை பிடிக்க அமெரிக்கா பல ஆண்டுகளாக வலை வீசி தேடி வருகிறது. ஆனாலும் பின்லேடனை பிடிக்க முடியவில்லை.

பின்லேடனிடம் முன்பு 1996 முதல் 2000 ஆவது ஆண்டு வரை உதவியாளராக இருந்தவர் நாசர் அல் பாக்கிரி. 35 வயதான பாக்கிரி இப்போது பின்லேடனை விட்டு விலகி ஓமான் நாட்டில் டாக்சி டிரைவராக இருக்கிறார். பாக்கிரியை ஒப்படைக்கும்படி அமெரிக்க உளவுத்துறையும் பொலிஸாரும் வற்புறுத்தியும் ஓமான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

இந்த நிலையில் பின்லேடன் பற்றியும் அவனிடம் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் பற்றியும் பாக்கிரி பரபரப்பு பேட்டி அளித்துள்ளார். அதில் பாக்கிரி கூறியிருப்பதாவது,

பின்லேடன் பற்றியும் அவனது நடவடிக்கைகள் பற்றியும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் உளவுத்துறை தகவல்களை பெற முயற்சி செய்தது. ஆனால் அவர்களது நடவடிக்கைகள் பற்றி பின்லேடனுக்கு முன் கூட்டியே தெரிந்து விடும்.

பின்லேடன் தினமும் அதிகாலையிலேயே எழுந்து விடுவார். காலையில் எழுந்ததும் தொழுகை நடத்துவார். சவூதி அரேபியாவில் பிறந்த நான் எனது 23 வயதில் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்தேன். எங்கள் தலைவர் பின்லேடனின் மெய்காப்பாளராக பணியாற்றி வந்தேன். ஆப்கானிஸ்தான் போரின் போது அல்–கொய்தா இயக்கத்துடன் சேர்ந்து போரிட்டேன். இரவு வரை தொழுகை நீடிக்கும். இடையே முக்கிய பிரமுகர்கள் சந்திப்பு நடக்கும்.

அவருக்கு ஓய்வு என்பதே இல்லை. எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார். ஏதாவது திட்டங்கள் தீட்டிக்கொண்டே இருப்பார். அவரது நடவடிக்கைகளை யாரும் தடுக்க முடியாது. 1990 முதல் அவரை பாதுகாக்கும் பணியில் நான் ஈடுபட்டேன். அவரது மூட்டை முடிச்சுகளை நான் சுமந்து செல்வேன். செயற்கை கோள் மூலம் தகவல் தொடர்புகளை கவனித்து அதை பின்லேடனிடம் தெரிவிப்பேன்.



பின்லேடனிடம் நான் உதவியாளராக இருந்தபோது யாரையும் நான் சுட்டுக் கொல்லவில்லை. எதிராளிகளிடம் சிக்கிக் கொண்டால் என்னை சுட்டுக்கொன்று விட வேண்டும் என்று தனது உதவியாளர்களுக்கு பின்லேடன் உத்தரவிட்டு இருந்தார். நல்ல வேளையாக எனக்கு அந்த துரதிர்ஷ்டமான நிலை ஏற்படவில்லை.

**உலக தரிசனம்**

முன்பு பின்லேடனை பார்க்க வந்த ஒருவர் அவரிடம் தகராறு செய்ததுடன் அவரை அவமதித்தார். நான் அவரை மடக்கி பிடித்து விட்டேன் அவரை மன்னித்துவிட்டு விடும்படி பின்லேடன் என்னிடம் கூறினார். இவ்வாறு நாசர் அல்பாக்கிரி கூறினார். (அ–5)

## இறந்தவர்களின் அஸ்தியை நிலவில் தூவலாம்

விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடும் நிறுவனங்கள் சுற்றுலா பயணிகளையும் விண்வெளிக்கு அனுப்பி வருகிறது. அந்த சுற்றுலா பயணிகளிடம் கணிசமான தொகை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதே போல அமெரிக்காவில் உள்ள 'செலஸ்டிஸ்' என்ற நிறுவனம் நிலவுக்கு ராக்கெட் மூலம் இறந்தவர்களின் அஸ்தியை கொண்டுசென்று தூவ ஏற்பாடு செய்துள்ளது.

அடுத்த ஆண்டு முதல் இறந்தவர்களின் அஸ்தி சந்திரனுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தூவப்படும். ஒரு அஸ்தி கலசத்துக்கு ரூ 8 இலட்சம் கட்டணம் செலுத்த வேண்டும். இதற்காக ஓடீசி என்ற நிறுவனத்துடன் செலஸ்டிஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. முதல் கட்டமாக அடுத்த ஆண்டுக்குள் 1000 அஸ்தி கலசங்கள் வரை நிலவுக்கு கொண்டு செல்ல முன்பதிவு ஆகும் என்று எதிர்பார்க்கி றார்கள் அடுத்த பயணத்தில் 5000 அஸ்தி கல சங்கள் நிலவுக்கு கொண்டு செல்லப் படும். (அ–5)

# ஆப்கானில் தீவிரவாதிகள் தாக்குதல் மின் உற்பத்தி நிலையம் தகர்ப்பு

(குந்தகார்)

ஆப்கானிஸ்தானில் அரசுக்கு எதிராகவும் அமெரிக்க படைகளுக்கு எதிராகவும் தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து தற் கொலை படை தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் ஹெல் மண்ட் மாகாணத்தில் கெரிஷ்க் மாவட்டத்தில் உள்ள ஒரு நீர்மின்சார உற்பத்தி நிலையத்தில் இன்று திடீர் என்று குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் அந்த மின் உற்பத்தி நிலையம் இடிந்து தரைமட்டமானது.

தலிபான் தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மின் உற்பத்தி நிலையத்தில் இருந்த ஊழியர்கள் பலர் இதில் பலியாகி இருக்கலாம். என்று கூறப்படுகிறது.

மின் உற்பத்தி நிலையத்தில் இருந்த ஊழியர்கள் பலர் இதில் பலியாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இது வரை 4 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆப் கானிஸ்தானின் மிகப் பெரிய மாகாணமான ஹெல் மாண்டில் தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவது குறிப்பிடத் தக்கது. (அ–5)

# விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திடம் நஷ்டஈடு கோரி கிராமவாசி வழக்கு

ரஷ்யாவில் இருந்து பிரிந்த கஜகஸ்தான் நாட்டில் உள்ள பைகானூர் ராக்கெட் தளத்தில் இருந்து தான் ரஷியாவின் விண்கலங்களை ஏற்றிக்கொண்டு ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்படுகின்றன. இந்த இடத்துக்கு அருகே தான்கிர்லிக் என்ற கிராமம் உள்ளது. இது ரஷ்யாவின் அல்டாய் பிரதேசத்தில் ராக்கெற் செல்லும்பாதையில் உள்ளது. இந்த கிராமத்தை சேர்ந்தவர் போரிஸ் உர்மாடோவ். இவர் மாடு மேய்த்து பிழைத்து வருகிறார். இவர் இரவு தூங்கிக்கொண்டு இருந்தபோது வெடி வெடித்தது போல சத்தம் கேட்டது. அவர் கண் பார்வை இல்லாதவர் என்பதால் அவரால் எதையும் பார்க்க முடியவில்லை.

மறுநாள் காலை அவர் வெளியே சென்ற போது 10 அடி நீள உலோகத்தகடு ஒன்று ராக்கெட்டில் இருந்து கழண்டு கீழே விழுந்தது. அது அவரது குடிசை வீட்டுக்கு வெளியே உள்ள கழிப்பறையை சேதப்படுத்தியது. இதை தொடர்ந்து அவர் ரூ.15 லட்சம் நஷ்டஈடு கேட்டு விண்வெளி ஆராய்ச்சி நிலையம் மீது வழக்கு தொடர்ந்து இருக்கிறார்.

கடந்த 50 ஆண்டுகளில் 400 ராக்கெட்டுகள் பறக்கவிடப்பட்டதாகவும் அவற்றில் சில வற்றில் மட்டுமே ராக்கெட்டு பாகங்கள் இப்படி கீழே விழுந்து வருவதாகவும் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அறிவித்து உள்ளது. (அ–5)

# தமிழகத்தில் விஜயகாந்தின் 'அரசாங்கம்' பெரும் பரபரப்பை ஏற்படுத்தும்!

(சென்னை)

விஜயகாந்தின் அரசாங்கம் படப் பாடல்களால் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




விஜயகாந்த் நடித்த அரசாங்கம் புதிய திரைப் படம் ஏப்ரல் 11ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இந்நிலையில் கடந்த 27ஆம் திகதி இப்படத்தின் பாடல் பதிவு நாடா வெளியிடப்பட்டது. இதில் உள்ள பாடல்களால் தமிழக அரசியலில் பரபரப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் படம் விஜயகாந்தின் 150 ஆவது படம் என்பதால் அரசியல் வட்டாரத்திலும் திரைப் பட வட்டாரத்திலும் இது குறித்து பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. விஜயகாந்த் நடிக்கும் படங்களில் பரபரப்பான வசனக் காட்சிகள் இடம் பெறுவது வழக்கம். அந்த வகையில் அனல் பறக்கும் அரசியல் வசனங்கள் மட்டும் இல்லாமல் அதிகப்படியான குத்தல் உரையாடல்களையும் இதில் விஜயகாந்த் பேசியுள்ளார். அரசியல் வசனங்களில் மட்டுமல்லாது 'அரசாங்கம்' பாடல் காட்சிகளிலும் இடம்பெற்றுள்ளதாக தெரிகிறது. (அ–5)

# சிறுகதை

# பெயர்



## மறைந்தும் மறையாத மகத்தான படைப்பாளி

படைப்பாற்றல் நிறைந்த எந்தக் கலை இலக்கியவாதியும் மறையலாம். ஆனால் அவர்களது படைப்புக்கள் மறைவதே இல்லை. அவை காலத்தை வென்று வாழ்ந்து, தம்மைப் படைத்தவரையும் வாழவைக்கும் வல்லமை உடையவை. இதுவே வரலாற்றுப் பேருண்மை!

அந்த உயர் வரிசைப் பீடத்திலே இடம் பெறும் படைப்பிலக்கியவாதிகளில் ஒருவர் தான் அமரர் 'ஸ்ரெல்லா புரூஸ்' !

'ஆனந்த விகடன்' வார இதழிலே அமரர் 'ஸ்ரெல்லா புரூஸ்' அவர்களுக்குரிய அறிமுகக் களத்தை வழங்கி, அவரைப் பற்றிய விவரக் குறிப்பையும் எழுதி ஊக்குவித்தவர் 'விகடன்' நிறுவன நிர்வாக இயக்குநரும் ஆசிரியருமாகிய திரு. எஸ்.பாலசுப்பிரமணியன் என்கிற எஸ்.எஸ்.பாலன் அவர்களே!

'பனங்காட்டு அண்ணாச்சி', 'அது ஒரு நிலாக்காலம்', 'மாயநதிகள்' ஆகிய நெடுங்கதைத் தொடர்களையும் மற்றும் சிறுகதைகள், குறுநாவல்கள் சிலவற்றையும் 'ஆனந்த விகடனிலேயே' தரநிறைவுடனும் நேர்த்தியுடனும் படைத்தளித்த அமரர் 'ஸ்ரெல்லா புரூஸ்' 'புதிய பார்வை' எனும் மாதமிரு முறை மல ரும் கலைஇலக்கிய இதழிலும் 'ஒருகோணல் வரைபடம்' என்கிற குறு நாவல் மூலம் தனது படைப்பிலக்கிய வீச்சை யும் வீரியத்தையும் வெளிக்காட்டியுள்ளார். இக் குறு நாவல், ஒரு மனநோயாளியின் உரு வாக்கத்தையும் அதன் பின் விளைவுகளையும் பற்றியது.

எந்தவிதப் புகழாரவாரமோ ஆர்ப்பாட்டமோ இல்லாத மிக எளிமையான படைப் பிலக்கியவாதியாகத் திகழ்ந்த அவர் கலை இலக்கியக் கும்பல்கள் எதையுமே சார்ந்து இயங்கியவர் அல்லர்! தானுண்டு, தன் படைப் புண்டு என வாழ்ந்து மறைந்த அப் படைப்பாளி, 'ஆனந்த விகடன்' 19-04-1998 இதழில் எழுதி வழங்கிய 'பெயர்' எனுந் தலைப்பில் அமைந்த சிறுகதையை 'வலம்புரி' வாசகர்களுக்காக எனது நூலகத் தொகுப்பில் இருந்து எடுத்து மறு பிரசுரமாகத் தருவதில் பெருமனநிறைவடைகின்றேன்.

*ஜெ.கி.ஜெயசீலன்*

பாண்டிபஜாருக்கு ரொம்ப பக்கத்தில் இருக்கும் ராஜா தெருவில் இருந்த பெரிய லாட்ஜ் ஒன்றின் தனியறை ஒன்றில்தான் அப் போது நான் இளைஞனாகத் தங்கியிருந்தேன். என்னுடைய சட்டை பாண்ட்டுகளைத் துவைத்துக் கொள்கிற பழக்கம் எனக்குச் சரிப்பட்டுவராத ஒன்று. பனியன்களைக் கூட லாண்டரியில் போட்டுத் தான் வாங்குவேன்.

அப்போது பாண்டிபஜார் போஸ்ட் ஆபீஸுக்கு எதிரில் ஒரு லாண்டரி இருந்தது. அதன் பெயர் மணிகண்டன் லாண்டரி, சலவைக்கான என் துணிகள் எல்லாவற்றையும் அந்த லாண்டரியில் தான் போட்டு வாங்குவேன். லாண்டரியின் ஓனர் எப்போதாவது தான் இருப்பார். இருந்தாலும் எந்த வேலையும் பார்க்காமல் சும்மாதான் உட்கார்ந்திருப்பார். லாண்டரியை, அவர் கொடுக்கிற ஏதோ ஒரு சம்பளத்துக்கு இளம்பெண் ஒருத்தி தான் கவனித்துக் கொண்டிருந்தாள். கொஞ்சம் கறுப்பாகவும் கொஞ்சம் ஒல்லியாகவும் இருந்த அந்தப் பெண்ணைச் சற்று நீளமாக அழகாக இருந்த கண்கள்தான் சிறிது அழகாகக் காட்டின. கைகளில் சில சமயங்களில் ரப்பர் வளையல்களும் சில நேரங்களில் கண்ணாடி வளையல்களும் அணிந்திருப்பாள்.

சலவைக்குப் போட்டு வாங்குவதற்காக நான் கொண்டுபோய்க் கொடுக்கிற என்னுடைய அழுக்குத் துணிகளை முதலில் வகை வாரியாகப் பிரித்துப் பரப்பி வைத்துக் கொள்வாள். சட்டைகளின் பாக்கெட்டுகளிலும் பாண்ட்டுகளின் பாக்கெட்டுக்களிலும் ஏதாவது இருக்கிறதா என்று சோதனை இடுவாள். பின், பில் புத்தகத்தை எடுத்துத் துணிகளின் விவரங்களையும் எண்ணிக்கைகளையும் எழுதிக்கொள்வாள். பிறகு அவற்றுக்கான பணத்தைக் கணக்கிட்டு எழுதுவாள். பின் அதன் கீழே துணிகள் டெலிவரி செய்யப்படும் தேதியையும் குறிப்பிடுவாள். அதைக் குறித்ததும் குனிந்திருந்த தலையை உயர்த்தாமலேயே 'பேர் சொல்லுங்க சார்...' என்பாள்.

முதன்முதலாக என் துணிகளை அந்த மணிகண்டன் லாண்டரியில் போடச் சென்றிருந்த போது 'பேர் செல்லுங்க சார்...' என்று அவள் தலையை உயர்த்தாமலேயே ரொம்பவும் மெல்லிய குரலில் கேட்டபோது அவள் என்ன கேட்டாள் என்பது சரியாக என்னுடைய காதில் விழவில்லை. அதனால் 'என்ன கேட்டீங்க?' என்றேன். தலையை நிமிர்த்தி ஆனால் என்னைப் பார்க்காமலேயே உங்க பேர் சொல்றீங்களா? தாமரைச்செல்வன் என்று என்பெயரைச் சொன்னேன். பில்லின் மேற்பகுதியில் என் பெயரை எழுதிவிட்டு பில்லைக கிழித்து என்னிடம் நீட்டினாள். எப்போது துணி போட்டாலும் பில்லின் விபரங்களை அவள் சரியாக எழுதியிருக்கிறாளா என்று நானும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை சரி பார்த்துக் கொள்வேன்.

பொதுவாக மாதத்தில் மூன்று தடவைகள் அந்த மணிகண்டன் லாண்டரியில் நான் என்னுடைய துணிகளைச் சலவைக்குப் போட்டு வாங்கிக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு முறையும் எப்போதும் போல அவள் துணிகள் பற்றிய எல்லா விவரங்களையும் பில்லில் குறித்துக் கொண்ட பின் தலையை உயர்த்தாமலேயே பேர் சொல்லுங்க சார் என்பாள். அவளின் உச்சந்தலை வகிட்டில் தூசி போல ஒட்டிக் கொண்டிருக்கும் பொடுகைப் பார்த்தவாறே நானும் பொறுமை இழக்காமல் தாமரைச் செல்வன் என்று என் பெயரை ஒவ்வொரு முறையும் சொல்லிக் கொண்டிருப்பேன்.

இப்படியே கிட்டத்தட்ட ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகவே நான் அந்த மணிகண்டன் லாண்டரியின் ரெகுலர் கஸ்டமர் ஆகிவிட்டிருந்தேன். ஆனாலும் ஒவ்வொரு முறை பில் போடும் போதும் அவள் பேர் சொல்லுங்க சார் என்று கேட்டு நான் பதில் சொன்ன பிறகுதான் பில்லில் என் பெயரை எழுதி வந்தாள். அது எனக்குக் கொஞ்சம் இம்சையாக இருந்தது. ஏழெட்டு மாதங்கள் ஆகியும் கூடவா என் பெயர் அவள் மனதில் பதியவில்லை. என்னால் அதை நம்பமுடியவில் .லை அதற்காக என்ன செய்ய முடியும். ஒவ்வொரு முறையும் என் பெயரைக் கேட்டது எரிச்சலாகத் தான் இருந்தது. நான் அந்த லாண்டரியின் ரெகுலர் கஸ்டமர் என்ற சின்ன அந்நியோன்யம் கூட அவளுடைய எந்த நடைமுறையிலும் தென் படவில்லையே. ஆனால் எல்லோரிடமுமே அவள் அப்படி நடந்துகௌ்வதாகத்தான் தெரிந்தது. தேவைக்கு மேல் யாரிடமும் எந்தப் பேச்சும் அவள் வைத்துக் கொள்வதில்லை லாண்டரி சம்பந்தப்பட்ட வேலைகளைத் தவிர வேறு எல்லாவற்றிலும் அவள் தாமரை இலை தண்ணீரைப் போலத்தான் இருந்தாள். ரொம்பவும் வறுமையில் அதே நேரம் சற்று அறிவோடும் கொஞ்சம் நாகரிகமாகவும் இருக்கிற இளம் பெண்கள் இவளைப் போல எதிலும் சிறிது பிடிப்பு இல்லாதது போலத் தான் இருப்பார்கள் என்று நானாக ஒவ்வொரு சமயத்தில் நினைத்துக்கொள்வதுண்டு.

இன்னொரு விஷயம் நான் வேறு எங்கேயாவது போகும் போதும் சரி திரும்பி வரும் போதும் சரி மணிகண்டன் லாண்டரியைத் தாண்டித் தான் போகவேண்டும் வரவேண்டும். அப்படிப் போகும்போதெல்லாம் அவளை ஒரு பார்வை பார்த்தபடிதான் போவேன். அப்போது கூட என்னை அவள் கவனிக்கிறாளா இல்லை யா என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது அந்த மாதிரி இருக்கும்.


அவளுடைய கண்களில் தெரியும் பாவனை.

சலவைக்குப் போடும் துணிகளை அநேகமாக மதியம் சாப்பிட்டுவிட்டு வரும்போது தான் திரும்பி லாண்டரியில் இருந்து வாங்கிக்கொள்வேன் பொதுவாக அது வாடிக்கையாளர்கள் துணிகளைப் போடவோ வாங்கவோ வராத நேரம். அதனால் அப்போது சில நேரங்களில் அவள் ஷோகேஸ்க்குப் பின்னால் பொதிபொதியாகக் கிடக்கும் துணி மூட்டைகளில் சாய்ந்தபடி கதை படித்துக்கொண்டிருப்பாள். ஒரு நாள் அவள் சாப்பிட்ட அசதியிலோ என்னவோ ஒரு துணி மூட்டையில் சாய்ந்தபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் .துணி வாங்கக் போன நான் பில்லுடன் இரண்டொரு நிமிடங்கள் மௌனமாக நின்று கொண்டிருந்த பின் அவளின் தூக்கத்தைக் கலைக்க விரும்பாமல் திரும்பி வந்துவிட்டேன். எனக்கு அவளின் பெயர்கூடத் தெரியாது. பெயரைத் தெரிந்து கொள்கிற ஆர்வமும் வந்தது கிடையாது. ஆனா லும் ஏதோ ஒரு மிருதுவான சதுக்கம் எனக்குள் அவளுக்காக இருந்தது போலும்.

அதேநேரம் அவளுக்குள் எனக்கான மென்மையான இடம் ஒரு அங்குலம் கூட இல்லாததாகத் தெரிந்ததில் ரொம்பவும் உள்ளுக்குள் என் பொறுமையைச் சோதித்துவிட்டதோ என்னவோ... ஒரு நாள் நான் 'ரியாக்ட்' பண்ணி விட்டேன்!

எப்போதும் போல அன்றும் நான் என் துணிகளைச் சலவைக்காக எடுத்துப் போயிருந்தேன். எப்போதும் போல அவளும் எல்லா சடங்குகளையும் முடித்துவிட்டு, "பேர் சொல்லுங்க சார்.." என்றாள்.

நான் பேசாமல் நின்றேன். அவளும் தலை குனிந்தவாறு காத்துக் கொண்டிருந்தாள். தொடர்ந்து நானும் பேசாமலேயே நின்றேன் .பின், அவளின் தலை மெதுவாக உயர்ந்தது. என்னைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்; "பில்லுல உங்க பேரை எழுத வேண்டாமா...? பேர் சொல்லுங்க..." நானும் அவளைப் பார்த்துக்கொண்டே கேட்டேன் ; 'உங்களுக்கு என்பேர் தெரியாதா...?"



நான் இப்படிக் கேட்டதும் சட்டென்று அவளின் முகபாவனை மாறிப் போய்விட்டது. நான் இந்தமாதிரி கேட்டது பிடிக்காதது போலிருந்தது அவளின் பார்வை. அவளுடைய முகத்தில் சின்னப் பதட்டம் கூட வந்துவிட்டது.

நான் விடவில்லை. "மனதைத் தொட்டுச் சொல்லுங்க... நெஜமாவே உங்களுக்கு என் பேர் தெரியாதா...? கிட்டத்தட்ட ஒன்பது மாதமா இந்த லாண்டரியில் துணி போடறேன். அப்படியிருக்கும்போது எப்படி என் பேர் உங் களுக்கு ஞாபகத்துல இல்லாமல் போயிடும்...? ஒவ்வொரு தடவை துணி போட வரும்போதெல்லாம் இந்தத் தடவையாவது என்கிட்ட பேர் கேட்காம பில்லில் என் பேரை எழுதுவீங்களானு பார்க்கிறேன்... நடக்கவே இல்லை; நான் எதிர்பார்த்தது. இதுவே உங்களோட இடத்துல நான் இருந்து, ஒரே ஒரு தடவை உங்கபேரைக் கேட்டுத் தெரிஞ்சுக்கிறேன்னு வெச்சுக்கோங்க... ஒன்பது மாசம் இல்லே, ஒன்பது வருஷமானா கூடக் கேட்காமலேயே உங்க பேரை எழுதுவேன்! இப்பச் சொல்லுங்க... என் பேரை நான் சொல்லித்தான் ஆகணு மா...? என்பேர் தெரியாதா உங்களுக்கு...?"

என்னுடைய பேச்சு அவளை மிகவும் பதட்டப்படுத்திவிட்டது. ஊசி முனை அளவு கண்ணீர் அவளின் கண்களில் துளிர்த்து நின்றாற் போல் தெரிந்தது. அந்தக் கண்களில் கொஞ்சம் துரதிர்ஷ்டமான ஆற்றாமை வேறு மெலிதாகப் படிந்திருந்தது. உதட்டைக் கடித்தவாறு தலையைச் சட்டென்று குனிந்து கொண்டாள். எனக்கு லேசாக வருத்தமாகி விட்டது. இப்படிப் பேசி இருக்கவேண்டாம் என்று தோன்றியது.

"சரிங்க.. அதெல்லாம் போகட்டும். நான் பேசினதையெல்லாம் மறந்துடுங்க. இப்ப நான் நெஜமாவே கேட்கிறேன்... உங்க பேர் சொல்லுங்க.. உங்க பேர் தெரிஞ் சாகணும் எனக்கு..." என்று மிகவும் அன்புடன் அவ ளைப் பார்த்துக் கொண்டே கேட்டேன். அவள் தலை நிமிராமல் குனிந்தவாறே இருந்தாள்.

"சொல்லுங்க, உங்க பேர் என்ன?" விடாமல் நான் கேட்டேன். அவள் மௌனமாகவே இருந்தாள்.

"அப்ப என் பேரை நான் சொல்லாமலே யாவது பில்லுல எழுதுங்க..." நான் இப்படிச் சொன்னதும் என்னை அவள் நிமிர்ந்து பார்த் தாள். அவளின் முகபாவனை சிறிதி இளகி விட்டாற்போல் தெரிந்தது.

"ஆமா... ஒண்ணு, உங்க பேரைச் சொல்லுங்க... இல்லே, நான் சொல்லாமலேயே என் பேரை எழுதுங்க..." என்றேன். நானும் விடாமல்.

உடனே அவள் குனிந்து வேகமாக பில்லில் எழுதி, அதைக் கிழித்து என் கையில் கொடுத்து விட்டாள். இதை எழுதுவதற்கு இவ்வள வு பாடுதேவையா என்ற நினைப்பில் பில்லைப் பார்த்தவன், இனிய ஏமாற்றத்துக்கு உள்ளாகிவிட்டேன். பில்லில் தாமரைச் செல்வன் என்ற என் பேரை எழுதாமல், வசந்தா என்று எழுதியிருந்தாள். நான் அவளைப்பார்த்தேன். அவளின் கண்களில் சின்ன சந்தோஷம் தெரிந்தது. "வசந்தாவா உங்க பேர்...?" என்றேன். அவள் பதில் சொல்லவில்லை. பில்லை மடித்துப் பத்திரமாக பாக்கெட்டில் வைத்துக்கொண்டு ,அவளிடம் விடைபெற்றுக்கொண்டேன்.

என்னுடைய அறைக்குப் போனதும் வசந்தா என்று அவள் எழுதிக் கொடுத்திருந்த அந்தப் பில்லை எடுத்துச் சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். மனதுக்குள் சின்ன சிரிப்பு வந்தது. ஏழைப் பெண்ணான அவளிடம் தென்பட்ட ஆர்ப்பாட்டம் இல்லாத புத்திசாலித்தனம் சின்ன திருப் தியையும் தந்தது.

இனி லாண்டரியை நான் தாண்டிப் போகும் நேரங்களில் என்னை அவள் எப்படிப் பார்ப்பாள் என்று யோசனை செய்து பார்த்தேன். எப்போதாவது ஏதாவது உதவி தேவைப்பட்டால், அதை அவளுக்குக் கண்டிப்பாகச் செய்துகொடுக்க வேண்டும் என் றும் நினைத்துக் கொண்டேன்.

ஆனால் எனக்கு மறுநாளே எதிர்பாராமல் உடம்பு சரியில்லாமல் போய்விட்டது ப்ரிஸ்கிரிப்ஸன் எழுதுவதற்காக டாக்டர் என் பெயரைக் கேட்டபோது என் மனதில் வசந்தாவின் தோற் றம் தெரிந்தது.

உடம்பு சரியான பிறகும் மிகவும் ஓய்ச்சலாக இருந்ததால் மேலும் 2நாட்கள் கழித் துத்தான் நான் அறையை விட்டு வெளியேறி னேன். என் உணர்வுகள் கொஞ்சம் நூதன மடைந்திருந்தன. மகிழ்வான எதிர்பார்ப்புடன் லாண்டரிப் பக்கம் நடந்தேன். ஆனால் லாண் டரியில் எனக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. லாண்டரியில் வசந்தாவைக் காணோம். வேறு ஒருபுதிய பெண் வேலை பார்த்துக்கொண்டிருந் தாள். வசந்தா என்ன ஆனாள் என்று தெரிய வில்லை. தொடர்ந்து 4நாட்கள் லாண்டரிப் பக்கம் போய் போய் வந்து கொண்டிருந்தேன். புதுப்பெண்ணேதான் வேலைபார்த்துக் கொண்டி ருந்தாள். ஏற்கனவே என்னுடைய துணிகளை வாங்கிக் கொள்ள வேண்டிய தேதிக்குப் பிறகு 5 நாட்கள் அதிகமாகிவிட்டிருந்தபடியால் வசந்தா அவளின் பெயரை எழுதிக் கொடுத்திருந்த பில்லையும் உடம்பு சரியில்லாமல் போன நேரத்தில் சேர்ந்து போய்விட்ட துணிகளைத் திணித்துக் கொண்ட பெரிய பாலிதீன் பையையும் எடுத்துக்கொண்டு லாண்டரிக்குப் போனேன்.

லாண்டரி முதலாளியும் அபூர்வமாக இருந் தார். புதிய பெண், சின்னச் சின்ன செயற்கை யான அலங்காரங்களுடன் இருந்தாள். யாரைப் பார்த் தாலும் எளிதில் சிரிக்கத் தயாராக இருப்பவள் போல அவளின் முகம் இருந்தது.

முதலில் துணிகளை வாங்கிக் கொள்வதற் கான பில்லைப் புதிய பெண்ணிடம் நீட்டினேன். தேடித் தேடி, ஒவ்வொரு துணியாக அவள் எடுத் துக்கொண்டிருந்தாள். லாண்டரி முதலாளியிடம் மிகவும் சகஜமாகக் கேட்கிற மாதிரியான பாவனையில் நான் கேட்டேன் "முன்னாடி வேற ஒரு லேடி இருந்தாங்களே, அவங்க இல்லையா...?"

"இல்லை சார்... அந்தப் பெண்ணை வேண் டாம்னு சீட்டைக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பி யாச்சு...." லாண்டரி முதலாளியும் ரொம்ப சகஜ மாகச் சொன்னார். ஏன் வீட்டுக்கு அனுப்பிவிட்டீர் கள் என்று அவரைக் கேட்க வேண்டும் போலிருந் தது. ஆனால் கேட்கவில்லை. கனமாக ஒரு பெரு மூச்சு விட்டேன். மனதில் சின்னதாக ஒரு வெறுமை தோன்றியது.

சலவை செய்யப்பட்ட துணிகளைப் பெற்றுக் கொண்டு, அதற்கான பணத்தைப் புதிய பெண் ணிடம் கொடுத்துவிட்டு, சலவைக்குப் போடுவதற் காகக் கொண்டு வந்திருந்த துணிகளையும் அவளின் நீட்டினேன். முதலில் அவள் துணிக ளின் எண்ணிக்கைகளையும் மற்ற விபரங்களை யும் பில்லில் எழுதிக் கொண்டாள். பின், புன்சிரிப் புடன் என்னை நிமிர்ந்து பார்த்தவாறு கேட்டாள்; "உங்கபேர் சொல்றீங்களா சார்...?"

அந்த ஒருநிமிடம் நான் என்னமோ ஆனேன். என் கண்களை ஒரு நிமிடம் மூடித்திறந்தேன். என் பெயரை நான் சொல்வதற்காக லாண்டரி முழுது வதுமே நிசப்தமாகக் காத்திருந்தது. "மன்னார் சாமி..." என்று கடுப்புடன் பல்லைக் கடித்துக் கொண்டு, நான் புதிய பெண்ணிடம் சொன்னேன்.

**ஸ்டெல்லா புரூஸ்**

நான் சொன்ன பெயரை பில்லில் எழுதக் குனிந்த புதிய பெண், அடுத்த விநாடியே என்னை நிமிர்ந்து பார்த்தாள். என்னுடைய தோற்றத்துக் கும் நான் சொன்ன மன்னார்சாமி என்ற பெய ருக்கும் சம்பந்தம் இல்லாதது போல் அவளுக்கு தோன்றியிருக்குமோ என்னவோ... இருந்தாலும், அதற்காக என்ன செய்யமுடியும் அவளால்...? என் எரிச்சல் எனக்கு. என் ஆத்திரம் எனக்கு.

மன்னார்சாமி என்ற பெயரையே எழுதி, அந்த பில்லைக் கிழித்து என்னிடம் நீட்டினாள் புதுப் பெண். அவளுடைய முகத்தில் புன்னகை மறைந்துபோயிருந்தது.

பில்லை நான் படித்துக் கூடப் பார்க்கவில்லை. வெறுப்புடன் அதை பாண்ட் பாக்கெட்டில் திணித்துக்கொண்டு கோபமாகவும் வேகமாகவும் லாண்டரியைவிட்டு நடந்துவிட்டேன். □

# சினிமாத் துளிகள்



■ சிவாஜிக்கு பிறகு ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கும் படம் ''அயன்' இதற்கு தமிழில்'' தலைவர்'' என்று பொருளாம். இந்தப் படத்தில் சூர்யா கதாநாயகனாக நடிக்க, தமன்னா நாயகியாக நடிக்கிறார். கதை, திரைக்கதை எழுதி இயக்குகிறார் ஒளிப்பதிவாளர் கே.வி. ஆனந்த், இந்தப் படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். இந்தப்படம் தீபாவளிக்கு திரையிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அயனால் ஏ.வி.எம்மிற்கு பயன் இருந்தால் சரி)

■ விஜய் நடித்த 'குருவி' படத்தின் வெளிநாட்டு உரிமையை வாங்க கடும்போட்டி ஏற்பட்டுள்ளதாம். அநேகமாக ஐங்கரனுக்கு தான் வழங்கப்படுமாம்.

■ 'ஐ.நோ', 'ஐ நோ' என்று பேசி எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பெற்ற குணசித்திர நடிகர் ரகுவரன் இறக்கும் முன் தன் மகனைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். அப்போது அவர் அருகில் இருந்த உதவியாளரிடம் தன் ஆசையை தெரிவித்தாராம். அவரும் யாருக்கோ போன் செய்து பார்த்து விட்டாராம். இறுதியில் அவரது ஆசை நிறைவேறாமலே போய்விட்டதாம்.

■ டாக்டர் காயத்ரி ஸ்ரீ காந்த் அவர்கள் எழுதி வெளியிட்ட ரஜினிகாந்தின் சுயசரிதை என்னும் புத்தகத்தில் ஏராளமான பிழைகள் இருந்ததால், சந்தையில் இருந்த அனைத்துப் பிரதிகளும் திரும்ப வாங்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிதாக அச்சடிக்கப்பட்ட புதிய பதிப்பு வழங்கப்படுகிறதாம்.

■ கதைக்கு தேவைப்பட்டதால்தான் ''சிலந்தி'' படத்தில் கவர்ச்சியாக நடித்ததாக வாக்குமூலம் கூறுகிறார் அப்பட நாயகி மோனிகா.

■ இந்தியாவிலிருந்து அமெரிக்கா செல்லும் நடிகர், நடிகைகளுக்கு வழங்கப்படும் விஸாவில் மோசடி நடைபெற்றதாகவும், அதற்கான விசாரணையில் ஈடுபட்ட சென்னையில் இயங்கும் அமெரிக்க ஸ்தானிகராலயம், குறிப்பிட்ட மூன்று இயக்குநர்களுக்கு அமெரிக்கா செல்ல நிரந்தரமாக தடைவிதிக்க முடிவு செய்துள்ளதாம். இந்த மூன்று இயக்குநர்களில் ஒருவர் பிரமாண்டமாக படமெடுப்பவர், மற்றவர் விக்ரம், சூர்யாவிற்கு திரையுலகில் வாழ்வளித்தவர், மூன்றாமவர் ''காக்க காக்க'' என்று வேண்டிக் கொண்டிருப்பவர்.

■ ராஜுசுந்தரம் இயக்கத்தில் 'ஏகன்' படத்தில் நடித்து வரும் அஜித், அடுத்து நடிக்க ஒப்புக்கொண்டுள்ள படத்தை சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கிறது. இந்தப் படத்தை கௌதம் மேனன் இயக்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

■ செல்வராகவன் ஒளிப்பதிவாளர் அரவிந்தகிருஷ்ணா இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்தது பழைய செய்தி. தற்போது சம்பள பிரச்சினைக்காக செல்வராகவனிடமிருந்து இசையமைப்பாளர் யுவன் சங்கராஜாவும் பிரிந்துசென்று விட்டாராம்.

■ ''திருவிளையாடல் ஆரம்பம்'' படத்திற்கு பின் தனுஷ், ஸ்ரேயா ஜோடியாக நடிக்கும் படத்தை இயக்குகிறார் வெற்றி மாறன். இவர் தனுஷை வைத்து ''பொல்லாதவன்'' என்ற வெற்றிப் படத்தை இயக்கியவர்.

## அங்காடித் தெருவில் சினேகா



ஐங்கரன் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் சார்பில் தயாராகும் படம் அங்காடித் தெரு. வசந்த பாலன் இயக்குகிறார். புதுமுகம் மகேஷ் ஹீரோ அவருக்கு ஜோடி அஞ்சலி.

இயக்குநர் ஏ.வெங்கடேஷ் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இப்படத்தின் ஷூட்டிங் சென்னையிலுள்ள ஜவுளிக்கடை ஒன்றில் நடந்தது.

ஜவுளிக்கடையில் பணியாற்றும் ஊழியர்கள் தங்கள் அபிமான ஹீரோயின் சினேகாவைப் பார்த்து மகிழும் காட்சியில் சினேகா நடித்தால் பொருத்தமாக இருக்கும் என்று அவரிடம் கேட்டனர். கதையைக் கேட்ட சினேகா அந்த வேடத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார். ஏற்கனவே இவர் ரஜினியின் குசேலன் படத்திலும் நடிகை சினேகாவாகவே நடிக்கிறார்.

## மும்தாஜ் வேற்றுக்கிரகப் பெண்



மீண்டும் கதாநாயகியாக நடிக்கிறார் மும்தாஜ்.

இனி ஒரு பாடலுக்கு ஆடுவதில்லை என முடிவெடுத்திருக்கிறார் மும்தாஜ். அத்துடன் கவர்ச்சிக்கு என்றே திணிக்கப்படும் கதாபாத்திரத்திலும் இனி தலைகாட்டாமாட்டாராம். மும்தாஜின் இந்த கறார் முடிவால் மும்தாஜ் கைவசம் இருக்கும் உருப்படியான ஒரே படம் மைலா. இதில் கதாநாயகியாக நடிக்கிறார் மும்தாஜ். ஹீரோயின் ஓரியண்ட் கதை என்பதால் ஹீரோவின் வேலையையும் இவரே கவனிக்கிறார். ரவிராஜ் என்ற இரட்டை இயக்குநர்கள், மைலாவை எழுதி இயக்குகிறார்கள். இதில் வேற்றுக்கிரகப் பெண்ணாக நடிக்கிறார் மும்தாஜ். பெயர் ''மைலா'' கேரக்டர் வேற்றுக் கிரகப் பெண். கதை சுவாரஸியமாக இருக்குமே என்று தூண்டில் போட்டால் '' அதை தெரிந்து கொள்ள ரிலீஸ் வரை பொறுத்திருங்கள் என நழுவுகிறார். ''மைலா'' வுக்குப் பிறகு நிறைய வாய்ப்புகள் வரும் என நம்புகிறார் மும்தாஜ்.

# சினி விமர்சனம்

## வைத்தீஸ்வரன்



மறுஜென்மம் இருக்கிறதா, இல்லையா? என்று ஒருகேள்வி கேட்டு... அதற்கு விடை தெரியாமல், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று சொல்வதுபோல மக்கள் கணிப்புக்கே விட்டு இயக்குநரே குழம்பியிருக்கும் படம் வைத்தீஸ்வரன்.

அட்டூழியங்களையும், அடாவடிகளையும் அலட்டாமல் செய்யும் அரசியல்வாதியாக வரும் ஷாயாஜி ஷிண்டே கோயில் நகைகளை கொள்ளையடிக்கிறார். அதை வினய்பிரசாத் மகன் பார்த்துவிட, அவனை கொலை செய்கிறார். வைத்தீஸ்வரன் கோயிலில் ஓலைச்சுவடிகளைப் பார்க்கும் நாடி ஜோதிடர் விஜயகுமார், வினய் பிரசாத்தை தேடி வருகிறார். கொலை செய்யப்பட்ட உன் மகன், மறுஜென்மம் எடுத்து வருவான். 30 வருஷம் சிவன் கோயிலில் தவம் இருந்தால், அவன் உன்னை சந்திப்பான். ஷாயாஜி ஆட்சிப் பீடத்தில் அமர்வதற்கு முன், உன் மகனால் அவன் கொல்லப்படுவான். இது நிச்சயம் நடந்தே தீரும் என்கிறார். அவரது கணிப்பு பலித்ததா? பொய்த்ததா என்பது தான் படத்தின் கதை. அவ்வப்போது முடிச்சுகள் போடுவதால் பரபரப்புக்கு பஞ்சமில்லாமல் நகர்கிறது. வினய் பிரசாத்தின் மகனை காப்பாற்று அம்மா என்று அழைக்கும் காட்சியில் உருக்கம். மேக்னாவுடன் தோன்றும் காட்சியில் கிளுகிளு. சண்டைக் காட்சிகளில் விறுவிறு. பாடல் காட்சியில் வண்ணமயம்... இவைதான் படத்தில் சரத்குமாரின் பங்கு. மனநல மருத்துவராக வரும் சரத்குமார் அந்த வேடத்துக்கு நன்றாகவே பொருந்துகிறார். தனக்கு கடவுள் நம்பிக்கை இருந்தாலும், மறுஜென்மத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லும் அவர், நான் உங்க மகன் சரவணன் இல்லை. டாக்டர் பாலா என்று முற்றுப்புள்ளி வைக்கும்போது ரொம்பவே உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார்.

### பரபரப்புக்கு பஞ்சமில்லை

மேக்னாவை கவர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது படத்தின் ஸ்டில்களை பார்க்கும்போதே புரிந்துவிடுகிறது. நடிக்க கொஞ்சம் வாய்ப்பு கொடுத்திருக்கலாம். படுக்கையறைக்குள் சரத் நுழையும்போது, மேக்னாவின் கவர்ச்சி கோணங்கள் கிளுகிளுக்க வைக்கிறது. மேக்னா காம்பரா.திருபுரா என்பதில் குழப்பமோ குழப்பம். சந்தானத்தை மேலும் இரண்டு காட்சிகளில் காட்டியிருக்கலாம். அவர் தலை காட்டும் ஒரேயொரு காட்சியும் கடியில் போய்த்தான் முடிகிறது.

கற்பழிப்புக் காட்சியில் சுஜா பலே. ஒளிப் பதிவும், ஸ்ரீகாந்த் தேவாவின் இசையும் படத்துக்கு ஓரளவு கை கொடுக்கின்றன. காட்சிகளின் நீளத்தை சற்றுக் குறைத்திருக்கலாம்.

மறுஜென்மம் விவகாரத்தை சாலமன் பாப்பையாவையோ, திண்டுக்கல் லியோனியையோ வைத்து பட்டிமன்றம் நடத்தினால் பொருத்தமாகவும், பரபரப்பாகவும் இருக்கும். சினிமாவாக எடுத்து தானும் குழம்பி, ரசிகர்களையும் குழப்பியிருக்கிறார் இயக்குநர். கடைசியில் மறுஜென்மத்தை நம்புவர்களுக்கு இவன் சரவணன்; நம்பாதவர்களுக்கு பாலா எனக் கூறி படத்தை முடிப்பது இயக்குநரின் புத்திசாலித்தனத்தையே காட்டுகிறது.

**வைத்தீஸ்வரன் - பட்டிமன்றம் நடத்தலாம்.**

# கண்ணும் கண்ணும்

**தயாரிப்பு:-** ஸ்கிரீன் பிளே எண்டர்டெயின்மெண்ட்

**நட்சத்திரங்கள்:-** பிரசன்னா, விஜயகுமார், ராஜேஷ், சந்தானம், ஹரீஸ், வடிவேலு, உதயதாரா, நீபா, வர்ஷினி மற்றும் பலர்

**கதை, திரைக்கதை, வசனம் இயக்கம் :-** ஜி.மாரிமுத்து

**கதை:** உறவு நிலைக்கும், காதல் உணர்வுக்கும் இடையே நடைபெறும் போராட்டம் தான்.

சத்யமூர்த்தி (பிரசன்னா) ஒரு அனாதை, கவிதையை பொழுதுபோக்கிற்காக எழுதுபவர். ஒரு பத்திரிகை நடத்தும் கவிதை போட்டியில் முதற்பரிசு பெற்ற செண்பகவல்லியை பாராட்டி கடிதம் எழுது கிறான். அதில் தன் பெயரை சத்யா என்று குறிப்பிடுகிறான். அந்தப் பெண் ணும் பதில் கடிதம் எழுத நட்பு வளர்கிறது. காதல் உரு வாகிறது. இந்நிலையில் தன் காதலியை சந்திக்க குற்றாலம் திரிந்து செல்வதென முடிவு செய் கிறான். அங்கு தன்னுடன் படித்த நண்பர் ஒருவரின் வீட்டில் தங் கவும் திட்டமிடுகிறான். இந் நிலையில் தன் கல்லூரி யின் சார்பில் அழைத்து செல் லப்படும் கல்விச் சுற்று லா விற்காக செண் பகவல்லி என்ற புனைபெயரை வைத்துக் கொண் டுள்ள நாயகி( உதய தாரா) செல்கிறாள்.



பாக்கலாம் ✓

குற்றாலத்தில் தன் நண்பரின் வீட்டில் தங்கும் நாயகன், நான்கு தங்கைகள் மற்றும் தந்தையுடன் தன் நண்பன் வாழ்ந்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார். அந்தக் குடும்பத்தில் தானும் ஒரு உறுப்பினராக வேண்டும் என்ற தன் ஆசையைக் கூறுகிறார். இதை அப்போதிருக்கும் மூன்று தங்கைகளும், தந்தையும் ஏற்றுக்கொள்கின்றனர். மூன்று தங்கைகளும் தன்னை அண்ணன் என்று அழைப்பதை கேட்டு சந்தோஷமடைகின்றான் நாயகன். மற்றுமொரு தங்கையும் தன்னை அண்ணன் என்று கூப்பிடுவாரா என்று எண்ணியிருக்கும் வேளையில் விபத்து ஒன்றில் நண்பர் பலியாகிறார். வேறு வழியின்றி சத்யமூர்த்தி அந்தக் குடும்பத்திற்கு தன்னால் தான் இழப்பு ஏற்பட்டது என்று கருதி தன் நண்பன் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்ற முடிவு செய்கிறான். இந் நிலையில் தன் அண்ணனின் மறைவுக்கு காரணமான நாயகனை செண்பக வல்லி என்ற புனைபெயரில் இருக்கும் நாயகி வெறுக்கிறாள். ஒரு கட்டத்தில் தான் காதலிக்கும் நாயகி தன் நண்பனின் தங்கை என்றவுடன் அதிர்ந்து போகிறான் நாயகன். இதை நாயகியும் தெரிந்து கொள்ளும் போது அவளும் துடிக்கிறாள்.

ஆனால் சூழல் காரணமாக அந்த வீட்டில் ஒரு அண் ணனாக இருந்து செய்யவேண்டிய அனைத்துக் கடமைகளையும், காதலியின் எதிர்ப்பையும் மீறி செய்கிறான் நாயகன். உன் மனதை மாற்றிக் கொள் என்று நாயகன். நாயகிக்கு கூற, நீ இந்த வீட்டில் இருக்கும் வரை நான் எப்படி உன்னை மறக்கமுடியும் என்று நாயகி கேட்கிறாள். நாயகன் வீட்டை விட்டு வெளியே சென்றாரா இல்லையா என்பது தான் உச்சக்கட்ட காட்சி.

### இயக்குநரை கைவலிக்கப் பாராட்டலாம்

காதல் சுயநலமற்றது என்பதை அழுத்த மாக பதிவு செய்திருப் பதற்காக இயக்கு நரை கைவலிக்கப் பாராட்டலாம். காதல் கோட்டை என்ற படத்தைப் போல் தொடங்கி பிறகு தன் இயல்பான பாதைக்கு திரும்பு கிறது இதன் கதை. காதல், தியாகம் செய்யும் போது அதன் மீதான மதிப்பு உயருகிறது என்பதை மீண்டும் ரசிகர் களுக்கும், காதலர்களுக்கும் உணர்த்தி இருக்கிறார் இயக்குநர். அதற்காக ரசனை குறைவான காதல் காட்சிகளை காட்டா தது ஆறுதல். கதையில் தமிழ் கலா சாரம் (தாய்மாமா மடியில் காது குத்துவது. சகோதரிக ளுக்கு பச்சைப் புடவை எடுத்துத் தருவது. தன் நண்பனின் தந்தை உடலுக்கு சிதை மூட்டுவது). ஆழமாக இழையோடப்பட்டிருக்கிறது. கதைக்கு தேவை யில்லை என்றாலும் குற்றாலத்தை பின்னணியாக அமைத்திருப்பது கண்ணிற்கு குளுமையாக இருக்கிறது. சில இடங்களில் ஊகிக் கக் கூடிய காட்சிகள் அமைந்திருந்தாலும் பிரதான கதையின் சுவை குறையவில்லை. வடிவேலுவின் காமடியில் ரசிகர்கள் சிரிப்பது நிஜம். நாயகி உதயதாராவின் நடிப்பில் புதுமுகமாகத் தெரியவில்லை.

சாது மிரண்டா, அஞ்சாதே ஆகிய வெற்றிப்படத் தின் வரிசையில் பிரசன்னாவிற்கு இந்தப் படமும் ஒரு வெற்றிப் படம். சத்யமூர்த்தி என்ற கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார். வைரமுத்துவின் கவிதை வரிகளுக்கு இசையமைப்பாளர் தினா இன்னும் சிறிது கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் அனைத்துப் பாடல்களும் கேட்கும் படி அமைந்திருக்கும். படத்திற்கு பெரும் வலுவாக ஒளிப்பதிவு அமைந்துள்ளது எனலாம். இதற்காக ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியத்தை பாராட்டலாம்.

**கண்ணும் கண்ணும் இயக்குநருக்கு வெற்றிப்படம்.**

# அஜித் அவ்வளவுதான் என்றவர்களுக்கு சரியான பதிலடி





அஜித் அவ்வளவுதான் என்று சொன்னவர்களுக்கு பில்லா சரியான பதிலடி கொடுத்திருக்கிறது.

பில்லாவுக்கு முன் அஜித் கொடுத்த கடைசி ஹிட் வரலாறு அதன்பிறகு வந்த ஆழ்வார், கிரீடம் இரண்டும் பாக்ஸ் ஆபிஸில் சொல்லும் படியான வெற்றியைப் பெறவில்லை. அதிலும் ஆழ்வார் எதிர்பாராத படுதோல்வியை சந்தித்தது.

அஜித் அவ்வளவுதான் என்று ஆளாளுக்குப் பேசத் தொடங்கிய போது பில்லா புரொயெக்ட்டேக் ஆஃப் ஆனது. ரீ-மேக் படம். அதுவும் ரஜினி நடித்தது. அஜித் அதில் என்ன செய்யப் போகிறார் என ஏளனமும், எதிர்பார்ப்பும் சரி விகிதத்தில் இருந்தது.

ஏளனத்தை முறியடித்து எதிர்பார்ப்பை நிறைவு செய்தது அஜித்தின் பில்லா. சில நடிகர்களைப் போல காசு கொடுத்து ஓட்டாமலே நூறு நாளை பில்லா கடந்திருக்கிறது.

சிவாஜிக்குப் பிறகு அதிகம் வசூலித்த படம் என்ற பெருமையையும் பில்லா பெற்றிருக்கிறது. சென்னையில் மட்டும் ஏறக்குறைய ஐந்துகோடி ரூபாய் வசூலித்துள்ள இப்படம் தொடர்ந்து நூறு நாட்கள் டாப் டென்னில் இடம்பெற்று சாதனை படைத்திருக்கிறது.

# சென்னை டெஸ்ட் சமநிலையை நோக்கி

# சேவாக் 319 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்;ராவிட் சதம்

(சென்னை)

ராகுல் ராவிட் சதம் விளாச இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 627 ஓட்டங்களை எடுத்து 87ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்க அணி மக்கன்சி, அம்லாவின் சிறப்பான ஆட்டத்தால் நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 131 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இத்தொடரின் முதலாவது டெஸ்ட் சென்னையில் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 540 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அம்லா 159 ஓட்டங்களையும் மக்கன்சி 93 ஓட்டங்களையும் சிமித் 73,பௌச்சர் 70 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 5 விக்கெட்டுக்களையும் கும்ளே 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சேவாக்கின் அதிரடி முச்சதத்தின் மூலம் நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 468 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் சேவாக் 309 ஓட்டங்களுடனும் ராவிட் 65 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் 4ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது இந்திய அணி.

**நிற்னி அசத்தல்**

சிறப்பாக ஆடி லாராவின் சாதனையை முறியடிப்பார் என ரசிகர்கள் எதிர்பார்த்த போது சேவாக் மேலதிகமாக 10 ஓட்டங்களை எடுத்து 304 பந்துகளில் (42 பவுண்டரிகள் 5 சிக்ஸர்கள் உட்பட) 319 ஓட்டங்களை எடுத்தபோது நிற்னியின் வேகப் பந்து வீச்சில் மக்கன்சியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

இதன் மூலம் சேவாக் தனதுமுந்தைய 309 ஓட்டங்கள் என்ற சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்தார்.

சேவாக்கும் ராவிட்டும் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக 268 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டனர்.

தொடர்ந்து 3ஆவது விக்கெட்டுக்காக ராவிட்டுடன் இணைந்த டெண்டுல்கர் வந்த வேகத்திலேயே ஓட்டமெதனையும் எடுக்காமல் (டக்-அவுட்) நிற்னியின் பந்துவீச்சில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய கங்குலி அதிரடியாக ஆடினார். மறுமுனையில் ராகுல் ராவிட் 85 ஓட்டங்களை எடுத்தபோது டெஸ்ட் கிரிக்கெட்டில் 10ஆயிரம் ஓட்டங்களை கடந்த 6வது வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

இதற்கு முன்பு லாரா, டெண்டுல்கர் அலன் போடர், ஸ்ரீவ் வோ, கவாஸ்கர் ஆகியோர் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

மறுமுனையில் கங்குலி 24 ஓட்டங்களை எடுத்தபோது ஹரிஸின் சுழலில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய லக்ஸ்மன் வழமையான நிதான துடுப்பாட்டத்தை வழங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய ராகுல் ராவிட் 10 மாதங்களின் பின்பு தனது 272-வது பந்தில் 24ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். எனினும் ராவிட் 111 ஓட்டங்களை எடுத்தபோது நிற்னியின் பந்துவீச்சில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ராவிட் ஆட்டமிழக்க இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 573 ஓட்டங்களை எடுத்தது. எனினும் தொடர்ந்து களமிறங்கிய தோனி 16, கும்ளே 3 ஓட்டங்களுடனும் ஹர்பஜன், ஆர்.பி.சிங் ஆகியோர் ஓட்டமெதனையும் பெறாமலும் ஸ்ரையனின் துல்லியமான வேத்திலும் மற்றும் லக்ஸ்மன் 39 ஓட்டங்களுடன் ஹரிசின் சுழல்பந்துவீச்சிலும் ஆட்டமிழக்க இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 627 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் ஸ்ரையன் 4 விக்கெட்டுக்களையும் நிற்னி, ஹரிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸில் 87 ஓட்டங்களால் பின்னிலையிலிருந்த தென்னாபிரிக்க அணி மக்கன்சி, அம்லாவின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நேற்றைய நான்காம்நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 131 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் மக்கன்சி 59 ஓட்டங்களுடனும் அம்லா 35 ஓட்டங்களுனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

முன்னதாக அணித்தலைவர் சிமித் 35 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

ஆட்டத்தின் 5-வது இறுதிநாள் இன்றாகும். இந் நிலையில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸிலும் பிரகாசிப்பதால் ஆட்டம் சமநிலையை நோக்கி செல்வதாக கிரிக்கெட் விற்பன்னர்கள் தெரிவிக்கின்றனர். (5)

# சிறந்த வீராங்கனையாக ஹெனின் தேர்வு

சர்வதேச டென்னிஸ் சம்மேளனத்தின் 2007 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீராங்கனையாக, பெல்ஜியத்தின் ஜெஸ்டின் ஹெனின் தேர்வு செய்யப்பட்டார்.

பெண்களுக்கான டென்னிஸ் உலக தர வரிசையில் முதலிடத்தில் உள்ள ஹெனின் இந்த விருதை வெல்லும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன்னர் 2003ஆம் ஆண்டின் சர்வதேச டென்னிஸ் சம்மேளனத்தின் சிறந்த வீராங்கனையாக ஹெனின் தேர்வானார்.

ஜெஸ்டின் ஹெனின் கடந்த ஆண்டில் பங்குபற்றிய 14 போட்டித் தொடர்களுள் 10 தொடர்களில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதில் கிர்ரான்ட்ஸ்லாம் போட்டிகளான பிரென்ச் ஓபன் மற்றும் அமெரிக்க ஓபன் போட்டிகளும் உள்ளடங்கும். அத்துடன் அவர் 5 மில்லியன் பரிசுத் தொகையாக பெற்ற முதல் வீராங்கனையாகவும் கடந்த ஆண்டில் சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே 2007ஆம் ஆண்டின் சிறந்த மகளிர் ஜோடியாக கரா பிளக் மற்றும் லெஸ்லி ஹாபர் ஆகியோர் முதல் முறையாக விருது வென்றார்.

கடந்த ஆண்டில் பிளக்-ஹாபர் ஜோடி அவுஸ்திரேலிய ஓபன் மற்றும் விம்பிள்டன் போட்டிகளில் இரட்டையர் சாம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் செர்பியாவின் அன்னா இவனோவிக் வளர்ந்துவரும் டென்னிஸ் வீராங்கனைக்கான விருதை வென்றார்.

அன்னா இவனோவிக், டென்னிஸ் தரவரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்ட சர்வதேச டென்னிஸ் சம்மேளனத்தின் சிறந்த வீரருக்கான விருதை சுவிட்ஸர்லாந்தின் முதல் நிலை வீரர் றொஜர் பெடரர் கைப்பற்றிக் கொண்டார்.

இதில் 2007ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆடவர் ஜோடியாக அமெரிக்காவின் பொப் பிரைன் மற்றும் மைக் பிரைன் சகோதரர்கள் தேர்வாயினர். (5)

# திரஸ்கோதிக் ஓய்வு

(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெற் வீரர் மார்க்கஸ் திரஸ்கோதிக் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இணையத்தளம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், தொடர்ந்து பல போட்டிகளில் விளையாடியதால் தான் மிகவும் களைப்படைந்துவிட்டதாகவும் இதனால் தனக்கு ஓய்வு தேவைப்படுவதாகவும்



கூறியுள்ளார்.

இதுவரை 76 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 5825 ஓட்டங்களை எடுத்துள்ளார். திரஸ்கோதிக் அதிகபட்சமாக 219 ஓட்டங்கள் குவித்து, 14 டெஸ்ட் சதங்களையும் அவர் அடித்துள்ளார்.

அதேபோல் 123 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 4335 ஓட்டங்களை அவர் எடுத்துள்ளார். அவரது ஓட்ட சராசரி 37.37 ஆகும்.

கடந்த 2006ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணி, இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது உடல்நலக் கோளாறு காரணமாக அத் தொடரில் இருந்து திரஸ்கோதிக் விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# முதல்தர போட்டிகளில் இருந்தும் ஷேன் வோர்ன் ஓய்வு

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் முதல் தர கிரிக்கெற் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்றார்.

இங்கிலாந்தின் ஹம்ப்ஷெயார் பிராந்திய அணிக்காக முதல்தர போட்டிகளில் விளையாடி வந்த வோர்ன், தனது வியாபார மற்றும் குடும்ப காரணங்களுக்காக இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவித்தார்.

எனினும் அவர் இந்திய கிரிக்கெற் சபையினால் நடத்தப்படும் இந்திய பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாட திட்டமிட்டுள்ளார். இதில் அவர் ராஜஸ்தான் ரோயல் அணியின் தலைவர் மற்றும் பயிற்சியாளராக செயற்படவுள்ளார்.

உலகில் முரளிக்கு அடுத்தபடியாக அதிக டெஸ்ட் விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ள ஷேன் வோர்ன் கடந்த 2006ஆம் ஆண்டு கடைசியில் நடைபெற்ற ஆஷஸ் கிண்ண கிரிக்கெற் தொடரை அடுத்து சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

இதனைத் தொடர்ந்து அவர் இங்கிலாந்தின் ஹம்ப்ஷயர் அணிக்காக பிராந்திய போட்டிகளில் விளையாடி வந்தார்.

போக்கர் விளையாட்டில் ஈடுபாடு காட்டிய ஷேன் வோர்ன் இந்த பருவ காலத்துக்கான இங்கிலாந்து பிராந்திய போட்டிகளில் பங்கு பெறுவதில்லை என அண்மையில் அறிவித்திருந்தார். இந்நிலையிலேயே அவர் முதல் தர போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஹம்ப்ஷயர் அணியின் புதிய தலைவராக இலங்கையை பூர்வீகமாக கொண்ட டிமிட்ரி மஸ்கரன் ஹாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனினும் 30 வயதான டிமிட்ரி மஸ்கரன்ஹாஸும் இந்த பருவகாலத்துக்கான இங்கிலாந்து பிராந்திய போட்டிகளில் விளையாடுவதில் சந்தேகம் நிலவிவருகிறது.



இந்திய பிரிமியர் லீக்கில் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள மஸ்கரன்ஹாஸ், ஷேன் வோர்ன் தலைமை வகிக்கும் ஜெய்ப்பூர் அணிக்காக விளையாடவுள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஹம்ப்ஷயர் அணிக்காக இங்கிலாந்து பிராந்திய போட்டிகளில் விளையாட ஆரம்பித்த ஷேன் வோர்ன் 2004ஆம் ஆண்டு தொடக்கம் ஹம்ப்ஷயர் அணிக்கு தலைவராக செயற்பட்டுள்ளார்.

அவர் இதுவரை இங்கிலாந்து பிராந்திய போட்டிகளில் 276 விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார். இதன் பந்துவீச்சு சராசரி 25.59 ஆகும். இது தவிர அவர் 2040 ஓட்டங்களையும் குவித்துள்ளார். (5)

## 94ஓட்டங்களைக் குவிப்பதற்கு

# மூன்றரைக் கிலோ எடையை இழந்துள்ளார் நீல் மக்கன்சி

(சென்னை)

சென்னை வெயிலில் விளையாடியதால் தென்னாபிரிக்க வீரர் நீல் மக்கன்சிக்கு மூன்றரை கிலோ எடை குறைந்துள்ளது தெரியவந்துள்ளது.



அணியின் டாக்டர் முகமது மூசாஜீ, தென்னாபிரிக்காவிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சேப்பாக்கத்தில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. அணித்தலைவர் கிரேம் சிமித்தும் மக்கன்சியும் ஆட்டத்தை ஆரம்பித்தார்.

அரங்கில் நிலவிய 35 டிகிரி செல்சியஸ் வெயிலில் 94 ஓட்டங்களைக் குவித்து அணிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார் மக்கன்சி. அதற்காக மணிக்கு ஒரு கிலோ வீதம் மூன்றரை கிலோ அவரது உடல் எடையில் குறைவு ஏற்பட்டுள்ளது பின்னர் தெரிய வந்துள்ளது.

இதனால் கவலை அடைந்த அணி டாக்டர் மூசாஜீ, ஒருவருக்கு ஒரே நாளில் மூன்றரை கிலோ எடை குறைவது என்பது அதிகமானது. சராசரியாக ஒன்று முதல் 2 கிலோவுக்கு மேல் ஒருவருக்கு எடை குறையக் கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

இழந்த எடையில் குறிப்பிடும்படியான பகுதியை தற்போது மக்கன்சி பெற்றுவிட்டார். முதல் டெஸ்டின் முடிவில் இழந்த எடை முழுவதையும் அவர் பெற்றுவிடுவார் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் மூசாஜீ. (5)

மரம் கோடரியைப் பார்த்துச் சொல்கிறது, நான் உனக்குக் கைப்பிடியைத் தராதிருந்தால் நீ என்னை வெட்ட முடியாது ! என்று.

– அர்மீனியா

வலம்புரி

# பேராசிரியர் பீரிஸுக்கு ஏன் இந்த (ஆ) வேஷம்

சர்வதேச நாடுகளின் மிரட்டல்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் அடிபணிய மாட்டாது என அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஆவேசமாகக் கூறியுள்ளார்.

மனித உரிமை மீறல்களைக் காரணங்காட்டி இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளை நிறுத்திவிடுவதில் சில அமைப்புக்கள் தீவிரம் காட்டுவதாக அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பேராசிரியர் பீரிஸ் ஓர் நல்ல மனிதர் என்ற நினைப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அவரின் சில நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

அதில் ஒன்று அவரின் கட்சித் தாவலாகும். பேராசிரியராகவிருந்த பீரிஸை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே அரசியலுக்கு வரவழைத்து அரசியல் விவகார அமைச்சுப் பொறுப்பை வழங்கினார்.

எனினும் அந்த நன்றியை மறந்த அவர், ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவினார். சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளை பொறுத்துக் கொள்ளாமல் பீரிஸ் கட்சி தாவினார் என்றால், பின்னாளில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் துரோகம் இழைத்துவிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ்வுடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி மகிந்தவின் எதிர்கால அரசியல் சூழ்நிலை தொடர்பில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்தே பேராசிரியர் பீரிஸின் எதிர்காலத் துரோகத்தனம் அமையும் என்பது வேறுகதை.

ஆனால் இப்போது பேராசிரியர் பீரிஸ் அவர்கள் உலக நாடுகள் மீது கோபாவேஷம் கொண்டுள்ளமைக்குக் காரணம் இல்லாமல் இருக்க முடியாது.

ஜனாதிபதி மகிந்தவின் அரசில் அரசிற்கு ஆதரவாக – உலக நாடுகளுக்கு எதிராகப் பேசுவதே பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான ஒரே வழி எனப் பீரிஸ் கருதியதன் விளைவுதான் அவரின் ஆவேஷத்துக்கான காரணம் என்ற முடிபுக்கு வருவதில் தவறில்லை.

ஆனால் சர்வதேச நாடுகளின் மிரட்டல் எனப் பேராசிரியர் பீரிஸ் கூறியிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். சர்வதேச நாடுகள் இலங்கையின் பொருளாதாரப் பலத்தைச் சூறையாடுவதற்காக மிரட்டுகிறதா? அல்லது இலங்கை உலக நாடுகளை அச்சுறுத்தும் அணுகுண்டைத் தயாரிப்பதற்காக அச்சுறுத்துகிறதா? என்பது பற்றி பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தால் பரவாயில்லை.

இதனைவிடுத்து இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமாக இடம்பெறுவதாக உலக நாடுகள் கூறியிருப்பதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. இதில் என்னதான் அச்சுறுத்தல் இருக்கின்றது?

உலக நாடுகளிடம் பிச்சா பாத்திரம் ஏந்தும் இலங்கை அரசின் அமைச்சராக இருக்கக் கூடிய பேராசிரியர் பீரிஸ், உலக நாடுகளின் அதட்டல்களுக்கு அடி பணியமாட்டோம் எனக் கூறியதிலிருந்து இலங்கையில் படித்தவர்கள், படியாதவர்கள் என அனைவரினதும் சிந்தனை ஒரு மட்டளவு என்பதையே உலகம் உணரும்.

# இந்தியாவின் கைப்பொம்மையாக ஜனாதிபதி மஹிந்த செயற்படுகிறார்

## ஜே.வி.பி உறுப்பினர் லால்காந்த

(கொழும்பு)

இந்தியா, இலங்கைக்கு இராணுவத்தினரை அனுப்பிய தன் பின்னர் ஜே.ஆர், இந்திய அரசின் முன்பாக முழங்காலில் விழுந்தார். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ; இந்தியா, இலங்கைக்கு இராணுவத்தினரை அனுப்பாமல் இருக்கையிலேயே இந்திய அரசின் முன் முழங்காலில் விழுந்துள்ளார்.

அந்தளவிற்கு மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் கைப்பொம்மையாக உள்ளார் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த கூறினார்.

மாத்தளை பொது நூலக கேட்போர் கூட மண்டபத்தில் மாத்தளை மாவட்ட மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சுஜாத்தா அழகக்கோன் தலைமையில் நடைபெற்ற மாத்தளை, இறத்தோட்டை மக்கள் விடுதலை முன்னணியின் கிளைகளின் பிரதிநிதிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

லால்காந்த அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், மாகாணசபை முறைக்கு மக்கள் விடுதலை முன்னணி விரோதமானது என்றாலும் கிழக்கு மாகாணசபைத்தேர்தலில் போட்டியிட தீர்மானித்தது ஏன் என பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

கிழக்கு மாகாணசபைத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி போட்டியிடுவது பிரிவினைவாதிகளின் குறுகிய நோக்கத்தை தோற்கடிக்கவும், மாகாணசபை முறையை ஒழிப்பது என்ற நோக்கத்திலுமேயாகும். மாகாணசபை முறை பிரிவினைவாதிகளை உருவாக்குவதாகும்.

மகிந்த ராஜபக்ஷவும் இந்தியாவின் கைப்பொம்மையாகவுள்ளார். இந்தியாவின் அடிப்படை நேக்கம் மாகாண சபையை ஏற்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரிவினை வாதத்தை உறுதிப்படுத்துவதாகும்.

இந்த அரசு கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு செல்வது அம் மாகாண மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்க அல்ல. இந்தியா உட்பட வெளிநாட்டு சக்திகளுக்கு உட்பட்டு பிரிவினை வாதிகளுக்கு வழிசமைக்கவே.

ஜே.ஆர்,11–வது அரசியல் திருத்தத்தின் மூலம் நாட்டில் மாகாணசபை முறையை உருவாக்கினார். வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்தார். தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான நிலம் என உடன்படிக்கையொன்றினை மேற்கொண்டு அதனை வெளியிட்டார். இந்தியா, இராணுவத்தின் மூலம் இலங்கையை ஆக்கிரமித்தது. மிகப்பெரிய இராஜதந்திரியான ஜே.ஆரைப் பாதுகாக்க ஒரு நட்பு நாடுகூட இருக்கவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியை சீர்குலைக்க சதி நடைபெறுகிறது. விரைவில் அவர்கள் யார் என்பதை பெயர் குறித்து வெளியிடுவேன். மக்கள் விடுதலை முன்னணியில் அரசியல் சபை இருப்பதில் பயனில்லை.

ஒவ்வொருவரது தனிப்பட்ட கருத்துக்களுக்கும் அரசியல் தீர்வினை காண இயலாது. பெரும்பான்மைக் கருத்துக்களையே கைக் கொள்வது அவசியமாகும் என்றார். (ந–5)

# வடக்கு - கிழக்குப் பிரிப்புக்கு எதிராக இடதுசாரி முன்னணிகள் போராட்டம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைக்கு தனியாக தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்கு–கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும் தொடர் போராட்டங்களை நடாத்துவதற்கு இடதுசாரிக்கட்சிகள் உள்ளிட்ட பல கட்சிகள் தீர்மானித்துள்ளன.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான புதிய இட்துசாரி முன்னணி, மேலக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல கட்சிகளும் இணைந்து எதிர்வரும் ஏப்ரல் 3இல் கொழும்பு இரத்மலானையில் முதலாவது போராட்டத்தை நடாத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மகாணசபைத் தேர்தலில் போட்டியிடாத அனைத்துக் கட்சிகளும் இந்தப் பேரர்ட்டங்களில் கலந்து கொள்வுள்ளன.

வடக்கு –கிழக்கு பிரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கு–கிழக்கு மாகாணங்களின் பிரிப்பானது அங்கு வசிக்கும் மக்களின் விருப்பத்திற்கு மாறாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கும் கலாநிதி கருணாரட்ன, பிள்ளையான் குழுவின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார்.

இலங்கையில் இப்போது முன்னெடுக்கப்பட்டுவரும் போரை நிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக உலகளாவிய ரீதியில் 50 இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுடனான முறைப்பாடொன்றை தயாரிப்பதற்காக புதிய இடதுசாரி முன்னணியின் பிரதிநிதி சுனில் ஹந்துநெற்றி வெளிநாடுகளுக்கு சென்றிருப்பதாகவும் விக்கிரமபாகு கருணாரட்ன கூறினார். (ந–5)

# சாட்சிகளைப் பாதுகாக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

சாட்சிகளைப் பாதுகாப்பது தொடர்பான ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சாட்சிகளையும் குற்றஞ்சுமத்தப்பட்டவர்களையும் பாதுகாக்கும் பொருட்டு ஜனாதிபதி, அமைச்சரவைக்கு யோசனை ஒன்றை சமர்ப்பித்திருந்ததாகவும் அதனை அமைச்சரவை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இந்த யோசனைகள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்படும் என அவர் கூறினார். பல ஐரோப்பிய நாடுகளில் இந்தச் சட்டம் நடைமுறையிலிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளதாக ஊடக அமைப்புகள் முன்வைக்கும் குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார். (ந–5)

# கிறிஸ்து அனுபவம்

**இன்று இயேசுவின் உயர்ப்பின் இரண்டாம் வாரம்**

அனுபவங்கள் கற்றுத்தருகின்ற பாடங்களை எந்த அறிவியல் கல்வியும் கற்றுத்தர முடியாது. புத்தபிரான் துன்பமே அறியாமல் அரண்மனையில் வாழ்ந்திருந்தார். ஆனால் ஒரு நாள் இறந்த ஒருவரின் உடலை தாங்கிய பாடையைத் தூக்கிக்கொண்டு உறவினர்கள் அழுது கொண்டு சென்றதைப்பார்த்து துன்பம் என்றால் என்ன என்பதை அனுபவித்தறிந்தார்.

இதை மேலும் ஆழமாக உணர வேண்டும் என்று அந்த அனுபவத்தை ஆன்மீகமாக்கி போதி மரத்தின் கீழ் அமர்ந்து தியானிக்கையில் ஒரு உண்மையோடு வெளிவந்தார். 'ஆசையே துன்பத்திற்கு காரணம்' என்பதை போதித்தார்.

ஆம் இதே அனுபவத்தைத்தான் யேசுவும் தன் தந்தையிடம் இருந்து பெற்றார். அது அவரின் அப்பா அனுபவம் (Abba Experience) இந்த அனுபவம் இரண்டு இடங்களில் அவருக்கு ஏற்பட்டது. 1. யோர்தான் நதியில் திருமுழுக்கு பெற்றபோது 2. த.பே. மலையில் தோற்றம் மாறியபோது.

இந்த அனுபவம் தான் அவரை மக்களுக்காக துன்பங்களை ஏற்க வைத்து

**பரமபிதா காட்டிய பாதை**

சிலுவையில் தன்னையே பலியாக்க வைத்தது.

இன்று நமக்கும் இந்த அனுபவம் கிடைக்கவேண்டும் என்றுதான் இன்றைய நற்செய்தி வலியுறுத்துகின்றது. அந்த அனுபவம் (Christ Experience) கிறிஸ்து அனுபவம் இதைத்தான் திருத்தூதர் தோமாவின் வாழ்விலிருந்து அறிகின்றோம்.

யேசு உயிர்த்த பின் தன் சீடர்களுக்கு முதல்முதல் தோன்றி தம்மையே வெளிப்படுத்திய போது தோமா அங்கு இல்லை. மற்ற சீடர்கள் இதைச் சொன்னபோது நம்ப மறுக்கிறார். காரணம் அது அவரின் சந்தேகத்தன்மை அல்ல. மாறாக தானும் அந்த உயிர்த்த யேசுவின் அனுபவத்தைப் பெறவேண்டும் என்ற ஒரே காரணத்தினால் தான் .

எனவே இரண்டாம் முறை யேசு சீடர்களுக்கு தோன்றும் போது இயேசு தோமாவுக்கு வெளிப்படுத்தி தன் காயங்களைத் காட்டி தான் உயிர்த்துவிட்டதை புரிந்து



கொள்ளும்படி அழைக்கிறார்.

உயிர்த்த ஆண்டவரின் காயங்களை தன் விரால் தொட்டுப்பார்த்த தோமா 'என் ஆண்டவரே! என் தேவனே! என்று சொல்லி இயேசுவின் காலில் நெடுஞ்சாடையால் விழுகின்றார். ஆம் தோமா கிறிஸ்து அனுபவத்தைப்பெற்றவிட்டார். கிறிஸ்து அனுபவத்தை பெற்றதோடு மட்டும் நின்று விடமால் அந்த அனுபவத்தை பலரும் பெற வேண்டி கடல் கடந்து பாரத நாட்டிற்கு வந்து போதித்தார். சாட்சியம் பகிர்ந்தார். அதற்காக உயிரையும் கொடுத்தார்.

ஜோன் ரொபேர்ட்

## சாதாரண...

முடியும் என பரீட்சைகள் பிரதி ஆணையாளர் போல் என்டனி தெரிவித்தார்.

ஏனைய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை 4 ஆம் திகதி பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். கடந்த வருடம் நடைபெற்ற பரிட்சையில் 5 இலட்சத்திற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வன்னி கூட்டுப்படைத் தளத்திற்கு...

பாதுகாப்பு நிலைவரங்களை ஆர்ாயும் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மன்னாரிலும் வவுனியாவிலும் நிறுத்தப்பட்டுள்ள 57,58- வது படையணிகளின் கட்டளைத் தளபதிகளும் பிரிகேடியர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மேஜர் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய வன்னி கள நிலைவரம் குறித்த அறிக்கையை வெளியிட்டு உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த மேலதிக அறிவுறுத்தல்களை லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## கிணற்றில் விழுந்து சிப்பாய் மரணம்

வவுனியா கொக்குவெளி இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கிணற்றில் விழுந்து மரணமாகியுள்ளார். 18வயதான இவர் திவுலப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். (ந-5)

## நாட்டில் இராணுவ ஆட்சி...

அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நானே இந்த அரசாங்கத்தை அமைத்தேன். இந்த அரசாங்கம் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீது அளவற்ற பற்று வைத்துள்ளேன். அதனால் கட்சி குறித்து விமர்சிக்க விரும்பவில்லை.

எனினும் நாட்டிற்கு ஆபத்தான நிலை ஏற்பட்டிருப்பதாக உணர்கிறேன். அரசாங்கத்தை இராணுவ மயப்படுத்துவது தெரிகிறது. எனது தந்தையும் தாயாரும் இந்த நாட்டின் ஜனநாயகத்தைக் கட்டிக்காக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

நான் ஒருபோதும் இராணுவ அரசாங்கத்தை அமைக்க இடமளிக்க மாட்டேன். எனக்கு மீண்டும் அரசியலுக்கு வர விருப்பமில்லை. எனது சகோதரி சுனேத்திராவும் அரசியலுக்கு வரமாட்டார். அத்தனகல தேர்தல் தொகுதியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைகளில் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தத் தொகுதியின் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்யவுள்ளேன்.

நான் எனது ஆட்சிக் காலத்தில் மூன்று தவறுகளைச் செய்துள்ளேன். மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டமை முதலாவது தவறாகும்.

2004 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கலைத்தமை இரண்டாவது தவறாகும். நான் இழைத்த மூன்றாவது தவறை எதிர்காலத்தில் கூறுவேன்.

அதலபாதாளத்தில் விழுந்துள்ள இந்த நாட்டைக் கட்டிஎழுப்ப வேண்டுமானால் 2 பிரதான கட்சிகளும் ஒன்றாக இணைய வேண்டும். நான் இன்னமும் அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றேன். தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நானே தேசிய தலைவன் ஆக்கினேன் என்றும் அவர் தெரிவித்தார். (ந-5)

## முப்படைத் தளபதிகளுடன்...

போதைய படை நடவடிக்கைகள் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கமளித்துள்ளனர். சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற இந்த மாநாட்டில் வவுனியா, மன்னார், மணலாறு, முகமாலைப் பகுதிகளில் நடைபெற்றுவரும் படை நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைத்தளபதிகள், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி, 57-வது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், 58-வது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சவீந்திர சில்வா, 59-வது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் நந்தன உடுவத்த மற்றும் கடற்படையின் பிராந்திய கட்டளைத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடும் மழையிலும் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தனக்குத் திருப்தி தருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பொதுவாகப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்குப் பிராந்திய கட்டளை அதிகாரிகள் அழைக்கப்படுவதில்லை.

எனினும் அவசரமான நேரங்களில் அவர்கள் அழைக்கப்படுவதுண்டு. 2000 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் உள்ள படையினர் பெரும் நெருக்கடியைச் சந்தித்தவேளை அன்றைய யாழ்.குடாநாட்டு கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது எனப் படைத்துறை அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ந-5)

## கொள்ளைக்...

மேற்படி வாகனத்தில் பயணித்தவர் என்றும் இவரே மேற்படி கொள்ளைக் கோஷ்டியின் தலைவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் புத்தளம்-கொழும்பு வீதியில் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்கள எலிய எனும் இடத்தில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த ஐவரும் சிலாபம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் தப்பிச் சென்றவர்களில் ஒருவரைப் புத்தளம் பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்துக் காயங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர். விபத்துக்குள்ளான வாகனத்திலிருந்து மூன்று துப்பாக்கிகள், வாள்கள், தங்க ஆபரணங்கள், பணம் முதலியவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கற்பிட்டிப் பிரதேசத்தில் கொள்ளை ஒன்றை மேற்கொண்டுவிட்டே இந்தக் கொள்ளை கோஷ்டியினர் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ந-5)

## அரசாங்கத்தின் சார்பில் பிள்ளையான்...

கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, முதலமைச்சர் வேட்பாளர் உட்பட அனைத்து வேட்பாளரும் நாளை தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கிழக்கு மாகாணத்தில்போட்டியிடவுள்ள வேட்பாளர் தெரிவு இன்று மாலை நடைபெற இருப்பதாகக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட நூற்றுக் கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார். இதே வேளை கிழக்கு மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக நாளை திங்கிட்கிழமைக்குப் பின்னர் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை.சேனாதிராஜா தெரிவித்தார்.

அதேநேரம் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் முதலமைச்சருக்கான வேட்பாளராகப் பிள்ளையான் போட்டியிடுவார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடுவது குறித்துத் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்புடன் கடந்த வாரங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தொடர் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது.

இந் நிலையில் தமிழர் ஒருவரே இம் மாகாணத்திற்கு முதலமைச்சராக வரவேண்டும் என்ற தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கோரிக்கை தொடர்பாக இரு கட்சிகளுக்குமிடையே காணப்பட்ட இணக்கப்பாடுகளை அடுத்துத் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் சார்பாக முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சந்திரகாந்தன் குபேரன் அல்லது பிள்ளையான் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் பொருட்டு தேர்தல் களத்தில் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## அரச தரப்பைச் சார்ந்தவர்கள் குற்றவாளிகளாகும்போது...

நல்ல திறமையுள்ள பண்பாற்றல் மிக்க நிபுணர்கள் தற்பொழுது காணப்படும் வரையறைக்குள் கண்காணிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை அரசு அழைக்க முடியாது.

அவ்வாறு அழைத்தால் அது பிழையானதாக இருக்கும். தற்போது காணப்படும் வரையறைக்குள்செயற்படுவதற்குத் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த நிபுணத்துவம் அற்ற பல்வேறு நீதிபதிகள் அல்லது பொலிஸ் அதிகாரிகளைப் புதிய நிபுணர்கள் குழுவில் உள்ளடக்குவது சிறந்தது என நான் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குகின்றேன்.

இதுவே ஆரம்பத்திலிருந்து நிலவி வந்த பிரச்சினை. அரசாங்கம் கேக்கைச் சாப்பிடவும் விரும்புகின்றது. வைத்திருக்கவும் விரும்புகின்றது. நிபுணத்துவம் பெற்ற திறமையானவர்களை அழைத்துத் தமது கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுமாறு வலியுறுத்தினால் அது எந்தப் பயனையும் அளிக்காது.

அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதன் காரணமாகவே சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு உருவாக்கப்பட்டது. ஒரு சில கண்காணிப்புகளுக்கு மாத்திரமே தொழில்நுட்ப ஆலோசகர்கள் இருந்தனர். உண்மையாக சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு தேவையாயின் அதற்கு அரசாங்கம் உரிய உள்ளீடுகளை வழங்க வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் நாம் உதவ முற்பட்டபோது இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக நாம் எச்சரிக்கப்பட்டோம். சில சமயங்களில் உரிய முறையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாததாக நாம் உணர நேரிட்டது. இவ்வாறான தவறான புரிந்துணர்வுகளால் சில இலக்குகளை எம்மால் எய்த முடியவில்லை. இது இலங்கைக்கு ஒரு தவறவிடப்பட்ட சந்தர்ப்பமாகிவிட்டது.

### சர்வதேசம் முழுமையாக ஈடுபட வேண்டும்

அரச தரப்பைச் சார்ந்தவர்களே குற்றவாளிகளாகவிருக்கும் சந்தர்ப்பங்களில் சர்வதேச நிபுணர்கள் குழுவின் பிரசன்னம், விசாரணை ஆணைக்குழுவின் சட்டபூர்வ நிலை குறித்த சந்தேகங்களைத் தோற்றுவித்தது.

ஆணைக்குழுவின் சட்டபூர்வத் தன்மை மற்றும் அதன் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இரண்டு விடயங்கள் ஏக காலத்தில் நடந்தாக வேண்டும் என்று குறிப்பிடும் கொட்,

விசாரணை ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்துவதுடன் தமது அரசியல் விருப்பாற்றலையும் காட்ட வேண்டும்.

அதேவேளை சர்வதேச சமூகம் இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் உரிமை மீறுவோருக்கு எதிரான தண்டனை போன்ற முழு விடயங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்.

### காலதாமதம்

விசாரணை ஆணைக்குழுவின் பிரதான குறைபாடு, விசாரணைகளை மேற்கொள்வதில் ஏற்பட்டு வரும் காலதாமதமாகும். இலங்கையில் சட்டப்படி இதனை இவ்வாறுதான் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணைப்படி பல்வேறு கட்டங்களாகவே இந்த விசாரணைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் சொல்கின்றார்கள். இலங்கைச் சட்டம் பற்றிய இந்த விளக்கத்தை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

### உண்மையைக் கண்டறியும் விசாரணை

ஆணைக்குழு என்கின்ற பணியுடன் நீதி விசாரணைகளுக்கு வேண்டிய ஆதாரங்களைக்கொண்டுவருமாறும் அதற்கான ஆணையில் தெரிவிக்கப்பட்டிருப்பதால் விசாரணை ஆணைக்குழு ஒரு அரை நீதித்துறை அமைப்பாகவும் செயற்பட வேண்டியிருக்கின்றது.

இது அதன் செயற்பாடுகளைப் பாதிப்பதாகவே அமையும். ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மீதான பிடி பல வழிகளிலும் ஜனாதிபதி செயலகத்திடம் இருப்பதால் அது சுயாதீனமாகச் செயற்பட முடியாதிருக்கிறது.

ஆணைக்குழுவுக்கான நிதியைத் தானே கையாளும் சுதந்திரம் கூட அதற்கு வழங்கப்படவில்லை. இதனால் ஒரு கட்டத்திற்குப் பின்னர் திரும்பத் திரும்ப ஒரே விடயங்களைச் செய்து கொண்டிருப்பதான உணர்வு ஏற்படுகின்றது.

### சாட்சிகளின் பாதுகாப்பும் சட்டப் பிரதிநித்துவமும்

சாட்சிகளைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளும் விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கையில் இல்லை. பல சாட்சிகள் தம்மை நேரடியாக அணுகி தமக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டால் சாட்சி சொல்லத் தயாராகவிருப்பதாகச் சொன்ன போதும் ஆணைக்குழுவினால் அதனைச் செய்ய முடியவில்லை.

ஆணைக்குழுவில் இருக்கும் பல்வேறு உறுப்பினர்களும் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களாகவோ அன்றி பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் ஆணைக்குழுவுக்குள் அதன் உறுப்பினர்களின் ஆர்வம் தொடர்பான முரண்பாடு நிலவுகிறது.

அத்தோடு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு வேண்டிய சட்டப் பிரதிநித்துவமும் உரிய முறையில் வழங்கப்படவில்லை. போதியளவு நீதியின்மையே இதற்குப் பிரதான காரணமாகும். இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் உதவ முடியும் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிடும் சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவின் பிரதிநிதியான கொட்,

போர் நடந்து கொண்டிருக்கும் போது அதே ஆட்சியாளர்கள் விசாரணைகளை நடத்துவதே இவ்வாறான பல சிக்கல்களுக்குக் காரணம் என்று கூறினார். (ந-5)




## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூர் பிரதேச செயலகத்தின் J/118 கோண்டாவில் மத்திய கிழக்கு கிராம சேவையாளருமான

**மகேந்திரம் தயாபரன்**

அவர்களின் திடீர் மரணத்தையிட்டு மனம் வருந்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயறுரும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுர நாதன் அருள வேண்டுமென இறைஞ்சுகிறோம்.

ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய வாழ் மக்கள்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(982)

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்-2008

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் 05.04.2008 சனிக்கிழமை அன்று முற்பகல் 11 மணியளவில் தலைவர் மா.நாகலிங்கம் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

*குறிப்பு:- குறித்த நேரத்திற்கு கூட்டம் ஆரம்பமாகும் என்பதனால் குறித்த நேரத்திற்கு அனைவரும் சமுகந்தரவும்.*

559,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்.

(C-940)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 30.03.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.